# பகுதி – 3

## 1.1 இந்திரா காந்தி
## (ADMINISTRATION OF INDIRA GANDHI, 1971-77)

1971-ம் வருட இந்தியா பாகிஸ்தான் போரில் இந்தியா பெற்ற வெற்றி இந்திரா காந்தியின் தனிப்பட்ட வெற்றியாகவும் இருந்தது. அவரது புகழ் ஓங்கியது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் புகழ் பெற்றார். காங்கிரஸ் கட்சியும், நாட்டின் ஆட்சியும் அவரது கட்டுப்பாட்டிற்குள் வந்தது. நாட்டில் ஸ்திரத்தன்மை நிலை இருந்தது. லோக் சபாவில் மூன்றில் இருபங்கு பெரும் பான்மை இருந்தது. இந்தியாவின் எதிர்காலத்தைப் பற்றி மக்கள் நம்பிக்கை யுடன் இருந்தார்கள். 1971-74ம் ஆண்டுகளில் அரசாங்கம் முற்போக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

புகழேணியின் உச்சியில் இருந்த இந்திரா காந்தியின் தலைமைக்கு 1973-ல் சவால்கள் ஏற்பட்டது. அவரது செல்வாக்கு குறையத் தொடங்கியது. 1974-ல் ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமையில் எதிர்ப்பு ஏற்பட்டது. அதன் தொடர்ச்சியாக இந்தியாவில் அவசர நிலை அறிவிக்கப்பட்டது. அது இந்திரா காந்தியின் வீழ்ச்சிக்கும் காரணமானது.

## இந்திரா காந்தியின் நிர்வாகம்

### a) முற்போக்கு நடவடிக்கைகள்

இந்திரா காந்தி சில முற்போக்கான நடவடிக்கைகள் மேற்கொண்டார். பொதுக்காப்பீட்டுத் தொழில் மற்றும் சுரங்கங்கள் தேசிய உடமையாக்கப் பட்டன. நகர நிலஉடமைக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது. ஏகபோக தொழில் நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதற்கு சட்டப்படியான கமிஷன் அமைக்கப்பட்டது. மாநிலங்களில் நிலமில்லாத விவசாயிகளுக்கு நில வினியோகம் செய்வதற்கு சட்டமியற்றப்பட்டது. நலிந்த பிரிவினருக்கு மலிவு விலையில் உணவுப் பொருட்களைக் கொடுக்க திட்டம் தயாரிக்கப்பட்டது. நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள் சிறிய நகரங்களிலும் பெரிய கிராமங் களிலும் கிளைகள் அமைக்குமாறு தூண்டப்பட்டன. கம்பெனிகள் அரசியல் கட்சிகளுக்கு அளிக்கும் நன்கொடைக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டது.

b) **அரசியலமைப்பு திருத்தங்கள்**

உச்சநீதிமன்றம் 1951 மற்றும் 1965-ல் சொத்துடைமை உரிமையை அடிப்படை உரிமையாக செய்திருப்பதில் திருத்தம் செய்வதற்கு பாராளு மன்றத்தின் அதிகாரத்தை அங்கீகரித்திருந்தது. ஆனால் 1967-ல் கோலக்நாத் வழக்கில் உச்சநீதிமன்றம் அந்த முடிவுகளை நிராகரித்தது. வங்கிகளை நாட்டுடைமையாக்கியதும், மன்னர்களுக்கான மானியத்தை ரத்து செய்ததும் செல்லாது என்று அறிவித்தது.

இதற்காக இந்திரா காந்தி காலத்தில் மூன்று அரசியலமைப்புத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. 24-வது அரசியலமைப்புத் திருத்தம் அடிப்படை உரிமைகள் உட்பட அரசியலமைப்பின் எந்தப் பகுதியையும் திருத்தும் உரிமை இருப்பதாக அறிவித்தது. மேலும் இந்த திருத்தத்தின்படி குடியரசுத்தலைவர் அரசியலமைப்புச் சட்டத்திருத்த மசோதாவிற்கு கையெழுத்திட்டே ஆகவேண்டும். 25-வது திருத்தத்தின்படி பொதுக் காரியங்களுக்காக அரசு கையகப்படுத்தும் நிலங்களுக்கு அளிக்கப்படும் இழப்பீட்டுத் தொகை பற்றி முடிவு செய்வதற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் தரப்பட்டது. இழப்பீடு பற்றிய வழக்குகள் நீதிமன்றத்தின் விசாரணைக்கு அப்பாற்பட்டவையாக்கப்பட்டது. 26-வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி, அரசியலமைப்பின் 29-வது ஷரத்தில் முன்னாள் மன்னர்களுக்கு கொடுக்கப்பட்ட மானியம் மற்றும் சிறப்புச் சலுகைகள் முற்றிலும் ஒழிக்கப்பட்டது.

c) **உள்நாட்டு பாதுகாப்பு பராமரிப்புச் சட்டம் : 1971** (Maintanance of Internal Security Act)

கட்சியிலும், ஆட்சியிலும் வரம்பற்ற அதிகாரத்தைப் பெற்றிருந்த இந்திராகாந்தி உள்நாட்டுப் பாதுகாப்பிற்காக ஏற்கனவே நடைமுறையில் இருந்த பாதுகாப்புச் சட்டங்கள் போதுமானதாக இல்லையென்று 1971-ல் உள்நாட்டுப் பாதுகாப்பு பராமரிப்பு சட்டம் (MISA) ஒன்றை இயற்றினார். இந்த மிசா சட்டத்தின்படி சமூக விரோதிகள், கள்ளக்கடத்தல்காரர்கள், வரி ஏய்ப்போர், சமூகக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர். ஆனால் இந்தச் சட்டத்தை தனது அரசியல் விரோதிகளை பழிவாங்கவும் பயன்படுத்தியதாக இந்திராகாந்தி விமர்சனம் செய்யப்பட்டார்.

d) **மாநில சட்டமன்றங்களுக்கான தேர்தலில் இந்திரா வெற்றி :**

பங்களாதேஷ் போரின் விளைவாக மக்களிடையே தனக்குக் கிடைத்த ஆதரவை மாநில அரசுகளில் தனக்கு ஆதரவாக நிலையை ஏற்படுத்திக் கொள்ள நினைத்தார் இந்திரா. எனவே மாநில சட்டம் மன்றங்களைக் கலைத்து தேர்தல் நடத்த உத்தரவிட்டார். 1972 மார்ச்-ல் தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம், கேரளா, ஒரிசா ஆகியவற்றைத் தவிர மற்ற மாநிலங்களுக்கு சட்டச் சபைக்குத்

தேர்தல் நடைபெற்றது. கோவா, மணிப்பூர், மேகாலயா தவிர எல்லா மாநிலங்களிலும் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. இந்த தேர்தலில் ஸ்தாபன காங்கிரஸ் மற்றும் சுதந்திரா கட்சிகள் காணாமல் போய் விட்டன. மத்தியிலும், மாநிலங்களிலும் மற்றும் கட்சியிலும் இந்திரா காந்தியின் தலைமை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### e) பொக்ரான் அணுகுண்டு பரிசோதனை :

1974, மே 18-ம் தேதி இந்திரா காந்தியின் வாழ்க்கையிலும் சமகால இந்தியாவின் வரலாற்றிலும் முக்கியமான நாள் ஆகும். அன்று இந்தியா தனது முதல் அணுகுண்டை வெடித்து சோதனை நடத்தியது. அணுகுண்டு வெடிக்கப் பட்ட இடம் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பொக்ரான் என்ற பாலைவனப் பகுதியாகும். அணுகுண்டு சோதனை நடக்கப்போகிறது என்ற தகவல் மத்திய மந்திரிகளுக்குக் கூடத் தெரியாது. இந்திராவுக்கும் அணுசக்தி விஞ்ஞானி களுக்கு மட்டுமே தெரியும். அணுகுண்டு வெற்றிகரமாக வெடிக்கப்பட்டு 4 மணி நேரத்திற்குப் பிறகுதான் அதுபற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அணுசக்தி தொழில் நுட்பவியலில் இந்தியாவின் திறமையைப் பரிசோதிப்பதற்காகவே இந்த சோதனை நடத்தப்பட்டது. இந்தியா அணு ஆயுதங்களைத் தயாரிக்காது. சமாதானத்துக்காகவே அணுசக்தியை பயன்படுத்துவோம் என்றார் இந்திரா. இதற்கு முன்பு அமெரிக்கா, ரஷ்யா உட்பட 5 நாடுகளிடம் மட்டுமே அணுகுண்டு இருந்தது. 6-வது அணு ஆயுத நாடாக இந்தியாவை உயர்த்திய பெருமை இந்திராகாந்திக்கு கிடைத்தது.

## 1.2 ஜெயப்பிரகாஷ் நாராயணனின் முழுப்புரட்சி
## 1.3 இயக்கமும் அவசர நிலைப் பிரகடனமும்

### அவசர நிலைப் பிரகடனம் செய்யப்படுவதற்கான காரணங்கள்

புகழும், அதிகாரமும் கொண்டிருந்த இந்திராகாந்தியின் செல்வாக்கு 1973-ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்தே குறைய ஆரம்பித்தது. அரசியலில் அவரது சர்வாதிகார நிலை வெளிப்பட்டுவிட்டது என்று எதிர்க்கட்சிகள் சாடின. நாட்டில் பல இடங்களில் கலவரங்களும், போராட்டங்களும் ஏற்பட்டன. எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் வேலையில் ஈடுபட்டார் லோக் நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயணன். அதன் தொடர்ச்சியாக 1975 ஜூன் 25-ல் இந்தியாவில் அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டது. அதற்கான காரணங்களை இனி காணலாம்.

### 1. பொருளாதார நெருக்கடி

1971-ல் சுமார் ஒரு கோடி பங்களாதேஷ் அகதிகளை இந்தியா உணவு கொடுத்து பராமரித்ததும், பங்களாதேஷ் போரினால் ஏற்பட்ட செலவும் நிதி

நெருக்கடியை ஏற்படுத்தின. அந்நிய செலாவணி இருப்பு கரைந்து விட்டது. தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளாக பருவமழை இல்லை. பல மாகாணங்களில் வறட்சி நிலவியது. கிராமங்களிலும், நகரங்களிலும் நிலவிய வறுமை சிறிதளவு கூட ஒழிக்கப்படவில்லை.

உணவுப் பொருட்களின் விலைகள் மிகவும் அதிகரித்தன. மக்களிடம் வாங்கும் சக்தி குறைந்ததால் கடைகளில் வர்த்தகம் குறைந்தது. 1973-ல் மட்டும் பெட்ரோல் விலை நான்கு மடங்கு அதிகரித்தது. 1972-73ல் மட்டும் விலைவாசி 22 சதவீதம் அதிகரித்தது. ஏழைகளும் மத்திய வர்க்கத்தினரும் பாதிக்கப்பட்டனர். நாட்டின் சில பகுதிகளில் மக்கள் உணவுப் போராட்டம் நடத்தினார்கள்.

## 2. அரசாங்கத்தில் அதிகரித்த ஊழல்

இந்திரா காந்தியின் ஆட்சிக்காலத்தில் அரசாங்கத்தில் ஊழல் அதிகரித்தது. காங்கிரஸ் ஆட்சி புரிந்த பல மாநிலங்களில் உயர்மட்ட ஊழல் குறித்த செய்திகள் வெளிவர ஆரம்பித்தன. இந்திரா காந்தியின் மீதே சட்டத்திற்கு புறம்பாக பலகோடி ரூபாய் தேர்தல் நிதி என்ற பெயரில் திரட்டியதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்திரா காந்தியின் இரண்டாவது மகன் சஞ்சய் காந்தி தனது கம்பெனி சிறிய ரக மாருதி கார் தயாரிப்பதற்கான மூலதனத்தை திரட்டினார். ஆண்டு தோறும் 50,000 கார்கள் தயாரிக்க அவருக்கு உரிமம் கொடுக்கப்பட்டது. இந்தக் கம்பெனிக்கு நிலம் கையகப்படுத்துவதற்கும், வங்கிகளிலிருந்து பெருந் தொகை கடனாக பெருவதற்கும் இந்திரா காந்தி சலுகை காட்டுகிறார் என்று குற்றம் சாட்டப்பட்டது.

இதற்கிடையில் நாகர்வாலா என்பவர் இந்திராகாந்தி மற்றும் அவரது செயலாளர் ஹக்சார் ஆகியோர் குரல்களில் பேசி, பங்களாதேஷ் போர்ச் செலவுக்கு தேவைப்படுவதாக கூறி, இந்திய ஸ்டேட் வங்கியின் தலைமை கணக்கர் வேத் பிரகாஷ் மல்கோத்ராவிடமிருந்து ஏமாற்றி 60 லட்சம் ரூபாய் பெற்றுக் கொண்டார் என்ற செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்து. அவர் 1971 மே மாதத்தில் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, ஒருபோலீஸ் அதிகாரி ஆகியோர் இறந்ததும், நாகர்வாலா சிறையில் மாரடைப்பால் இறந்து போனதும் மக்களிடையே இந்திரா காந்தி மீது சந்தேகம் ஏற்பட்டது. அவரது புகழுக்கு களங்கம் ஏற்பட்டது. மக்கள் இந்திரா அரசு மீது அதிருப்தியடைந்தனர்.

## 3. நாடு முழுவதும் நடைபெற்ற போராட்டங்களும், கலவரங்களும்

a) 1974-ல் நாடு முழுவதும் மக்கள் அமைதி இழந்தனர். போராட்டங்களும் கலவரங்களும் பெருமளவில் நடைபெற்றன. 1974 - மே மாதத்தில்

அகில இந்திய ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் நடைபெற்றது. 22 நாட்கள் நடைபெற்ற வேலை நிறுத்தத்தினால் தொழிலாளர்கள் மத்தியில் இந்திரா காந்தி மீது வெறுப்பு அதிகரித்தது.

b) வேலையில்லாப் பிரச்சனையால் நாடு முழுவதும் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் பொறுமை இழந்தனர். மாணவர்களின் போராட்டங் களினால் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் நெடுங்காலம் வரை மூடப் பட்டிருந்தன.

c) உத்திரப் பிரதேச மாநிலத்தில் 1973-மே மாதத்தில் மாநில ஆயுதக் காவலர்படை கலகம் செய்தது. ராணுவம் அதை ஒடுக்கிய போது 35 காவலர் களும் வீரர்களும் இறந்தார்கள்.

d) ஏழைகள் காங்கிரசை ஆதரித்தாலும் அவர்களிடம் தீவிரம் இல்லை. விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்ட மத்திய வர்க்கம் காங்கிரசை கண்டனம் செய்தது. அரசாங்கத்தின் முற்போக்கான நடவடிக்கைகளால் பீதியடைந்த பணக்கார விவசாயிகள் இந்திரா காந்தியை எதிர்த்தார்கள்.

e) *குஜராத் கலவரம் : 1974, ஜனவரி*

1971-ல் படுதோல்வியடைந்த எதிர்க்கட்சிகள் 1972-ல் நடைபெற்ற மாநில சட்டமன்றத்துக்கான தேர்தல்களிலும் தோல்வியடைந்தன. இப்போது அவைகள் இந்திரா காந்தியைப் பழிவாங்கத் துடித்தன. அரசாங்கத்துக்கு எதிராகப் போராடுவதற்குத் துணிவில்லாத எதிர்க்கட்சிகள் யாராவது நடத்துகின்ற இயக்கத்தை ஆதரிக்க முடிவு செய்தன.

1974 ஜனவரியில் குஜராத் மாநிலத்தில் சமையல் எண்ணெய் மற்றும் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்து கலகங்கள் வெடித்தன. மாணவர்கள் தலைமையேற்ற இயக்கத்தில் அரசியல் கட்சிகளும் ஈடுபட்டன. குஜராத் முதலமைச்சர் சிமன்பாய் படேல் பதவி விலக வேண்டும் என்றும், சட்டமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்று நாடு தழுவிய போராட்டம் நடைபெற்றது. கலவரம் பரவியது. போலீஸ் படையினர் அதிகமான வன்முறையைக் கையாண்டு துப்பாக்கி சூடு நடத்தினர். மத்திய அரசின் தலையீட்டின் பேரில் முதலமைச்சர் சிமன்பாய் படேல் பதவி விலகினார். அங்கு குடியரசுத்தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது. 1974 மார்ச் மாதம் மொரார்ஜி தேசாய் சாகும் வரை உண்ணாவிரதம் தொடங்கிய பிறகு சட்டமன்றம் கலைக்கப்பட்டது. ஜூன் மாதத்தில் சட்டசபைத் தேர்தல் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

f) *பீகார் கலவரம் : 1974, மார்ச்*

குஜராத் போராட்டம் வெற்றி பெற்றவுடன் பீகாரிலும் 1974 மார்ச்-ல் மாணவர்கள் போராட்டத்தைத் தொடங்கினார்கள். மார்ச் 18-ல் மாணவர்கள் சட்டசபையைக் கெரோ செய்த போது போலீசார் சுட்டதில் 27 பேர்

மரணமடைந்தார்கள். மாணவர்கள் போராட்டத்தை எதிர்க் கட்சிகள் ஆதரித்தன. கட்சி அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த தலைவர் ஜெயப் பிரகாஷ் நாராயணன் போராட்டத்திற்குத் தலைமை தாங்கியதுடன் எல்லோரையும் ஊழல் செய்யத் தூண்டுகின்ற அமைப்பை எதிர்த்து முழுப் புரட்சி செய்யுங்கள் என்று அறை கூவல் விடுத்தார். பீகார் சட்டசபையைக் கலைப்பதற்கு இந்திரா காந்தி உறுதியாக மறுத்துவிட்டார். ஜெயப்பிரகாஷ் இயக்கம் ஜனநாயக முறைக்கு எதிரானது என்றார் இந்திரா. தேர்தலில் போட்டியிட்டு மக்களின் ஆதரவை நிரூபிக்குமாறு சவால்விட்டார். ஜெயபிரகாஷ் அந்த சவாலை ஏற்றுக் கொண்டார்.

## 4. ஜெயப்பிரகாஷ் நாராயணனின் முழுப்புரட்சி

சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக பங்கெடுத்துக் கொண்டவர். மகாத்மா காந்தியுடனும் பண்டித நேருவிடமும் பற்றும் பாசமும் கொண்டவர். இந்திரா காந்தி நெருக்கடி நிலையகைக் கொண்டு வந்த போது அதைக் கடுமையாக எதிர்த்தார். பொங்கி எழுந்தார். 30 ஆண்டுகாலம் டில்லியில் தொடர்ந்து ஆட்சி நடத்திய காங்கிரசைப் பதவியை விட்டு அகற்றி எதிர்க் கட்சியினரை ஆட்சியிலமர்த்தினார். அவர் தான் ஜே.பி. என்றழைக்கப்படும் ஜெயப்பிரகாஷ் நாராயணன்.

உத்திரப்பிரதேசம் பீகார் எல்லையில் உள்ள பலார்லானி என்ற கிராமத்தில் 1902, அக்டோபர் 11-ல் ஜெயப்பிரகாசர் பிறந்தார். தந்தை பெயர் ஹப் சுத்பால், தாயார் பெயர் புல்ராணி. ஜெயப்பிரகாசருக்கு 18 வயதான போது திருமணம் நடந்தது. 1922-ல் அமெரிக்கா சென்று பயின்று எம்.ஏ. பட்டம் பெற்றார். 1930-ல் இந்தியா திரும்பிய ஜெயப்பிரகாசர் காந்திஜியின் மீது அன்பு கொண்டார். காங்கிரஸ் கட்சியில் இணைந்து சுதந்திரத்திற்காகப் பாடுபடப் போவதாக நேருவிடம் தெரிவித்தார். காங்கிரசின் தொழிற்சங்கப் பிரிவின் செயலாளராக நேரு அவரை நியமித்தார்.

காங்கிரஸ் நடத்திய பல போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்ற ஜெயப்பிரகாசர் சோசலிசக் கருத்துக்களினால் ஈர்க்கப்பட்டார். 1933-ல் சிறையிலிருந்து வெளிவந்த பின் கட்சியின் உட்பிரிவாக காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி என்ற அமைப்பை நிறுவினார். 1942-ம் வருட வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார். ஆங்கில அரசாங்கம் அவரைக் கைது செய்து சிறையிலடைத்தது. 1945-ல் விடுதலை செய்யப்பட்டார்.

இந்தியாவைப் பிரித்து பாகிஸ்தான் அமைக்க வேண்டும் என்ற ஜின்னாவின் கோரிக்கையை ஜெயப்பிரகாசர் எதிர்த்தார். முடிவில் பாகிஸ்தான் பிரிவினைக்கு காங்கிரஸ் சம்மதம் தெரிவித்த போது ஜெயப் பிரகாசரின் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி, காங்கிரசை விட்டு விலகியது. கட்சியின்

பெயரையும் சோசலிஸ்ட் கட்சி என்று மாற்றினார். சோசலிசக் கொள்கையை பரப்பி வந்த ஜெயப்பிரகாசர் 1951-ல் வினோபா தொடங்கிய பூமிதான இயக்கத்தில் ஈடுபாடு கொண்டார். 1954-ல் அரசியலில் இருந்து விலகி வாழ்நாளை பூமிதான இயக்கத்திற்கு அர்ப்பணிக்கப் போவதாக அறிவித்தார்.

1974-ல் பீகாரில் மாணவர் போராட்டம் தொடங்கிய போது எதிர்க்கட்சி களின் ஆதரவுடன் போராட்டத்திற்குத் தலைமை தாங்கினார். சட்ட சபை உறுப்பினர்கள் பதவி விலக வேண்டும். அரசாங்க அலுவலகங்களைக் கெரோ செய்யவேண்டும். மக்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்தக் கூடாது என்றார். அப்போது தான் அவர் ஊழல் செய்யத் தூண்டுகிற அமைப்பை எதிர்த்து முழுப் புரட்சி செய்யுங்கள் என்றார்.

ஜெயப்பிரகாசர் அப்பழுக்கற்ற தேசபக்தர். பதவி ஆசை இல்லாதவர் நேர்மையானவர், சிவில் உரிமைகளுக்கும், ஏழைகளின் முன்னேற்றத்திற்கும் உழைப்பவர். அவர் பல ஆண்டுகளாக கட்சியில்லாத ஜனநாயகத்தைப் பேசினார். 1974-ல் தற்போது முழுப்புரட்சி செய்யவேண்டும் என்றார். இரண்டு கருத்துக்களையுமே அவர் சரியாக விளக்கிக் கூறவில்லை.

ஜெயப்பிரகாசின் முழுப்புரட்சி என்பது சமுதாயத்தின் ஒருதுறையிலோ அல்லது சில துறைகளிலோ ஏற்படும் மாற்றம் என்று பொருள்படாது. சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் ஒரே நேரத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும். அப்போது தான் சமுதாயத்தில் வளர்ச்சி ஏற்படும் என்றார். அவர் தனது முழுப்புரட்சி என்பதில் ஏழு புரட்சிகளை உள்ளடக்கியுள்ளார். அவை, சமூகப்புரட்சி, பொருளாதாரப் புரட்சி, அரசியல் புரட்சி, கலாச்சாரப் புரட்சி, கல்விப்புரட்சி, அறிவுப்புரட்சி, ஒழுக்கப்புரட்சி ஆகியவையாகும். முழுப் புரட்சி பற்றிய இவரது கருத்து ஆக்கப்பூர்வமானதும் அறிவுப்பூர்வமானதும் ஆகும்.

ஜெயப்பிரகாஷ் நாராயணன் பாராளுமன்ற ஜனநாயகத்தை இடை விடாமல் குறை கூறினார். அது மக்களிடம் அவநம்பிக்கையை ஏற்படுத்தியது. அவர் பல வகையான எதிர்க்கட்சிகளின் ஆதரவை ஏற்றுக் கொண்டார். வகுப்பு வாதக் கட்சிகளான ஜனசங்கம் மற்றும் ஜமாத் - இ - இஸ்லாம் அவரை ஆதரித்தன. RSS ஆதரித்தது. பழமைவாத ஸ்தாபன காங்கிரஸ் மற்றும் சோசலிஸ்டுகள், நக்சலைட் குழுக்கள் அவரை ஆதரித்தன. இந்திராகாந்தியை விரட்ட வேண்டும் என்ற கொள்கையைத் தவிர வேறு திட்டம் அவரிடம் இல்லை.

இந்திரா ஊழலின் பிறப்பிடமாக உள்ளார். இந்தியாவில் சோவியத் நாட்டைப் போல சர்வாதிகாரத்தை ஏற்படுத்தி ஜனநாயக ஆட்சியை அழிப்பதற்கு விரும்புகிறார் என்றார் ஜெயப்பிரகாஷ். இந்திரா பிரதமர் பதவியில் நீடித்தால் இந்தியாவில் ஜனநாயகம் நிலைக்காது என்றார். எதிர்க்கட்சித் தலைவர்களும் இதே மாதிரியான கருத்துக்களைக் கூறினார்கள்.

முதலமைச்சராக இருந்த சித்தார்த்த சங்கர் ஆவார். நீங்கள் ராஜினாமா செய்தால் இந்தியா முழுவதும் குழப்பம் ஏற்படும். இந்திய ஒருமைப்பாட்டுக்கே ஆபத்து ஏற்படும் என்றார். மேலும் ராணுவத்தினரும் போலீசாரும் இந்திராவுக்கெதிராக புரட்சி செய்யவேண்டும் என்று ஜெ.பி. பேசிய செய்தியும், இந்திரா வெளியே வரமுடியாதபடி வீட்டை முற்றுகை இடும் போராட்டம் பற்றிய செய்தியும் உளவுத் துறையிடமிருந்து இந்திராவுக்கு கிடைத்தது.

நீண்ட நேரம் உயர்மட்ட ஆலோசனை நடத்திய இந்திரா, குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமதுவைச் சந்தித்தார். உளவுத்துறை அறிக்கை அடிப்படையில் உள்நாட்டுக் கலவரம் வெடிக்கக் கூடிய சூழ்நிலை உருவாகி உள்ளது. எனவே நெருக்கடி நிலை பிரகடனம் செய்ய வேண்டிய கட்டாயம் எற்பட்டுள்ளது என்று அவரிடம் கூறினார். அதன் தொடர்ச்சியாக 1975, ஜூலை 26-ல் அதிகாலை பக்ருதீன் அலி அகமது அரசியலமைப்பின் 356வது பிரிவின் படி நெருக்கடி நிலை பிரகடனம் செய்தார். பின்னர் நெருக்கடி நிலை பிரகடனத்திற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

## நெருக்கடி நிலை கால நடவடிக்கைகள்

நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்ட அன்றே நள்ளிரவில் ஜெயப் பிரகாசரைத் தட்டி எழுப்பி கைது செய்தனர். மேலும் மொரார்ஜி தேசாய், வாஜ்பாயி, ஜார்ஜ், பெர்னாண்ட்ஸ் உட்பட இந்தியா முழுவதும் எதிர்க்கட்சித் தலைவர்கள் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டனர். கல்வியாளர்கள், பத்திரிகையாளர்கள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், மாணவர் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். RSS, ஆனந்த் மார்க், ஜமாத் -இ, இஸ்லாமி மற்றும் மாவோயிஸ்ட் குழுக்கள் தடை செய்யப்பட்டன. நெருக்கடி நிலை நீடித்த 19 மாதங்களில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டனர். குண்டர்கள், பதுக்கல்காரர்கள், கடத்தல்காரர்கள் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டபோதே பத்திரிக்கை தணிக்கையும் வந்துவிட்டதால் தலைவர்கள் கைது பற்றிய விபரங்கள் பத்திரிக்கைகளில் இடம்பெறவில்லை.

## பாராளுமன்ற நடவடிக்கைகள்

நெருக்கடி நிலை காலத்தில் லோக்சபாவிற்கு அமர்வுகள் நடைபெற்றன. நெருக்கடி நிலைக்கு ஒப்புதல் அளிக்கும் தீர்மானத்தின் மீது பாராளு மன்றத்தில் ஜூலை 22-ல் ஓட்டெடுப்பு நடைபெற்றது. நெருக்கடி நிலைக்கு ஆதரவாக 336 ஓட்டுகளும் எதிராக 59 ஓட்டுகளும் பதிவாயின. அவர்கள் லோக்சபாவில் அவசர நிலையின் அத்துமீறல்களைக் கண்டித்துப் பேசினார்கள். ஆனால் பத்திரிக்கைகள் அவர்களது உரைகளைப் பிரசுரிக்க வில்லை.

நெருக்கடி நிலையின் போது தமிழ்நாட்டில் திமுக ஆட்சி நடந்து வந்தது. நெருக்கடி நிலையை முதலமைச்சர் கருணாநிதி எதிர்த்தார். இதன் காரணமாக கருணாநிதி தலைமையிலான திமுக அரசு 1976, ஜனவரி 31-ல் டிஸ்மிஸ் செய்யப்பட்டது. உத்திரப் பிரதேசத்திலும், ஒரிசாவிலும் காங்கிரஸ் முதலமைச்சர்கள் அகற்றப்பட்டு வேறு நபர்கள் நியமிக்கப்பட்டனர்.

## அரசியலமைப்புத் திருத்தங்கள்

அடுத்து அரசாங்கச் செயல்பாட்டைக் கட்டுப்படுத்துகின்ற உச்சநீதி மன்றத்தின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு சில அரசியலமைப்பு திருத்தங்கள் நிறைவேற்றப் பட்டன. இந்திய பாதுகாப்புச் சட்டத்திலும், மிசாவிலும் செய்யப்பட்ட திருத்தங்கள் மக்களின் உரிமைகளைக் குறைத்தன.

1976-டிசம்பர் மாதம் செய்யப்பட்ட 42-வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி நீதிமன்றத்தின் பல உரிமைகள் குறைக்கப்பட்டன. சமய சார்பற்ற சோசலிசம் என்ற வார்த்தைகள் அரசியலமைப்பின் முகப்புரையில் சேர்க்கப்பட்டது. அடிப்படை கடமைகள் சேர்க்கப்பட்டது. அரசியலமைப் பைத் திருத்துவதில் பாராளுமன்றத்தின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. அரசியலமைப்பு திருத்தங்கள் நீதிமன்ற அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட தாக்கப்பட்டது. அரசின் வழிகாட்டு நெறிகள் அடிப்படை உரிமைகளை விட சக்தி வாய்ந்த தாக்கப்பட்டது. குடியரசுத்தலைவர் அமைச்சரவை ஆலோசனைப்படி தான் செயல்படவேண்டும். உயர்நீதிமன்றத்தின் மத்திய அரசின் சட்டங்களை செல்லாது என்று கூறும் அதிகாரம் உட்பட மற்றும் சில அதிகாரங்கள் குறைக்கப்பட்டது. தேசத்துரோகச் செயல்கள் பிரிக்கப்பட்டு அவற்றை ஒடுக்க பாராளு மன்றம் சட்டம் இயற்றலாம்.

அடிப்படை உரிமைகளின் பெயரால் நிலச்சீர்திருத்தம் போன்ற சமூக பொருளாதார நடவடிக்கைகளை நீதிமன்றம் தடை செய்தது. எனவே நீதிமன்றத்தின் அதிகாரத்தைக் குறைக்க வேண்டும் என்று கூறப்பட்டது. ஆக, நெருக்கடி நிலை எல்லையில்லாத ஆட்சியதிகாரத்தை பிரதமருக்கு அளித்தது. பிரதமரைச் சுற்றியிருந்த அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் அதனைப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

## நெருக்கடி நிலையும், பொதுமக்களும்

நெருக்கடி நிலையின் போது சமூக விரோதிகள் கைது செய்யப்பட்டதை மக்கள் வரவேற்றார்கள். நகரங்களில் குற்றங்கள் குறைந்தன. அலுவலகங்கள் முறையாக இயங்கின. அதிகாரிகள் ஊழியர்கள் சரியான நேரத்திற்கு வேலைக்கு வந்தார்கள். வேலை செய்தார்கள். பொது மக்களிடம் அன்பாகப் பேசினார்கள். வேலை நிறுத்தங்கள் இல்லை. முழு அடைப்பு இல்லை. கல்லூரிகள் ஒழுங்காக நடைபெற்றன. பிரபல பத்திரிக்கையாளர் சிந்தாமல் கோத்ரா ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்தங்களும் நகர வாழக்கையை நாசப்படுத்தியிருந்தன. சகஜ வாழ்க்கை மறுபடியும் ஏற்பட்ட போது மக்கள்

அதைப் பாராட்டினர். நெருக்கடி நிலை இந்தியாவில் அதுவரை இல்லாத அமைதியை ஏற்படுத்தியது என்று எழுதினார்.

கடத்தல்காரர்கள், பதுக்கல்காரர்கள், வரிகட்டாதவர்கள், தடுப்பு சந்தை வர்த்தகர்கள் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப் பட்டார்கள். இதனால் கள்ள மார்க்கெட் ஒழிந்தது. உணவுப் பொருட்கள் விலைகள் குறைந்தன.

## இருபது அம்சத்திட்டம்

நெருக்கடி நிலை அமுலுக்கு வந்த பின் 1975, ஜூலை 1-ம் தேதி இந்திரா காந்தி தனது 20 அம்சத்திட்டத்தை அறிவித்தார். விலைவாசியைக் குறைத்தல், அரசாங்கச் செலவைக் குறைத்தல், நிலமில்லாத ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்குதல், விவசாயிகளின் கடன் ரத்து, புதிய கடன்களை வழங்குதல், உபரி நிலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்தல், விவசாயத் தொழிலாளர்களின் கூலியை உயர்த்துதல், கைத்தறி நெசவாளர்களுக்கு விசேஷ உதவி, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு வரிச்சலுகை பாடப்புத்தகங்களை குறைந்த விலையில் வழங்குதல், ஏமாற்றுபவர்கள், கடத்தல்காரர்கள் கைது, இன்றியமையாத உணவுப் பொருட்களின் சீரான வினியோகம், மின்சார உற்பத்தியை, அதிகரித்தல், சாலைப்போக்குவரத்தை மேம்படுத்துதல், விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு சலுகை விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல் போன்றவை 20 அம்சத் திட்டத்தில் முக்கிய அம்சங்களாகும்.

இந்திரா காந்தியின் இந்த 20 அம்சத்திட்டம் அதிகமாக விளம்பரம் செய்யப்பட்டது. அரசு நடவடிக்கையின் மூலம் பதுக்கல், கடத்தல், வரி ஏய்ப்பு குறைந்தது. 30 லட்சம் நிலமில்லாத ஏழைகளுக்கும், தலித்களுக்கும் வீட்டுமனைகள் வழங்கப்பட்டன. 11 லட்சம் ஏக்கர் உபரி நிலம் நிலமில்லாத ஏழைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. கொத்தடிமை முறை சட்ட விரோதமாக்கப்பட்டது. சில மாநிலங்களில் சிறு விவசாயிகளின் பழைய கடன்கள் ரத்து செய்யப்பட்டன. விவசாயத் தொழிலாளர்களின் குறைந்த பட்சக் கூலி உயர்த்தப்பட்டது. மொத்தமாகப் பார்க்கும் போது 20 அம்சத் திட்டத்தால் ஏழைகளுக்கு சிறிதளவு நன்மை கிடைத்தது. ஆனால் அவர்களின் அடிப்படை நிலைமை மாறவில்லை.

## நெருக்கடி கால அத்துமீறல்கள்

நெருக்கடி நிலையை காமராஜர் எதிர்த்தார். பகிரங்கமாகக் கண்டித்தார். நெருக்கடி நிலை அமலாகி 4 மாதத்தில் 1975 அக்டோபர் 2-ல் காமராஜர் திடீரென மாரடைப்பால் காலமானார்.

இதற்கிடையே இந்திரா காந்தி தேர்தல் வழக்கில் உச்ச நீதிமன்ற பெஞ்ச் தனது இறுதித் தீர்ப்பை வழங்கியது. ரேபரேலி தொகுதியில் இந்திரா காந்தி வெற்றி பெற்றது செல்லும் என்று 1975 டிசம்பர் 19-ல் தீர்ப்பு கூறப்பட்டது.

1976-ல் மார்ச்சில் முடிய வேண்டிய பாராளுமன்றத்தின் பதவிக்காலம் மேலும் ஒரு வருடத்திற்கு தள்ள வைக்கப்பட்டது.

1976-ம் ஆண்டின் மத்தியிலிருந்து மக்கள் அவசர நிலையை எதிர்க்க ஆரம்பித்தார்கள். கடத்தல்காரர்களும் கள்ள மார்கெட் வர்த்தகர்களும் மறுபடியும் இயங்க ஆரம்பித்தார்கள். தொழிலாளர்களும் அவசர நிலையை எதிர்க்க ஆரம்பித்தார்கள். எதிர்பார்த்த முன்னேற்றம் இல்லாததால் ஏழை விவசாயிகள் அதிருப்தியடைந்தார்கள்.

20 அம்சத்திட்டம் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுகின்ற பொறுப்பு அரசாங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர்கள் வழக்கம் போல ஊழல் செய்தார்கள். இதனால் பொதுமக்கள் எரிச்சல் அடைந்தார்கள். சாதாரண மக்கள் மற்றும் படித்தவர்கள் கூட அதிகாரிகள் மற்றும் போலீஸ்காரர்களைக் கண்டு அஞ்சினார்கள்.

தணிக்கை முறை அமலில் இருந்ததால் ஊழல்கள் மறைக்கப்பட்டன. பத்திரிக்கை மற்றும் வானொலிச் செய்திகளை மக்கள் நம்பவில்லை.

## சஞ்சய் காந்தியின் அத்து மீறல்கள்

எல்லாவற்றிற்கும் மேலாக இந்திரா காந்தியின் இளைய மகன் சஞ்சய் காந்திக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அரசாங்கத்தில் அல்லது கட்சியில் அவருக்கு எந்தப் பதவியும் இல்லை. ஆனால் அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தன் விருப்பப்படியெல்லாம் உத்தரவு பிறப்பித்தார். மத்திய, மாநில அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் அவரைச் சந்தித்தார்கள். அவர்களுக்கு சஞ்சய் காந்தி நேரடியாக உத்தர விட்டார்.

1976 ஜூலையில் அவர் தனது நான்கு அம்சத்திட்டத்தை வெளியிட்டார். அவை வரதட்சணை வாங்கக் கூடாது, குடும்பக் கட்டுப்பாடு, செடிகள் நடுதல், எழுத்தறிவைக் கற்பித்தல் ஆகியவையாகும். இந்திரா காந்தியின் 20 அம்சத் திட்டத்தை விட சஞ்சய் காந்தியின் 4 அம்சத்திட்டம் அதிக முக்கியத்துவம் பெற்றது.

வட இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் குடும்பக் கட்டுப்பாடு தீவிரப் படுத்தப்பட்டது. அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கு கோட்டா நிர்ணயிக்கப் பட்டது. ஏழைகள் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். அதை எதிர்த்து பல இடங்களில் கலகங்கள் ஏற்பட்டன. நெருக்கடி நிலை அமுலுக்கு வந்த 5 மாத காலத்திற்குள் 37 லட்சம் பேர் கருத்தடை செய்யப்பட்டனர்.

பொதுமக்கள் அவசர நிலை நீடிப்பதை மனதளவில் எதிர்த்தார்கள். சஞ்சய் காந்தியின் தூண்டுதலால் நடைபெற்ற அத்துமீறல்களால் மக்களுடைய எதிர்ப்பு உச்சக்கட்டத்தை எட்டியது.

## திடீர்த்தேர்தல்

அரசியல் நிலைமையை உன்னிப்பாக கவனித்த இந்திரா காந்தி பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு தேர்தல் நடத்தினால் தனக்கு மெஜாரிட்டி கிடைக்கும் என்று நம்பினார். மேலும் தான் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர் என்பதை நிரூபிக்க வேண்டியதிருந்தது. அத்துடன் நெருக்கடி நிலைகால அத்துமீறல்கள் இந்திராகாந்திக்குத் தெரிந்த போது அவர் தான் பொறியில் சிக்கிக் கொண்டிருப்பதாக உணர்ந்தார். அதிலிருந்து தப்புவதற்காக வெற்றி தோல்வி பற்றிக் கவலைப்படாமல் பொதுத் தேர்தலை அறிவித்தார்.

1977 ஜனவரி 18-ல் ரேடியோவில் பேசிய போது மார்ச் மாதம் லோக் சபாவுக்குத் தேர்தல் நடைபெறும் என்று அறிவித்தார். உடனே தணிக்கை முறை ஒழிந்தது. 19 மாதங்கள் கழித்து அரசியல் கைதிகள் விடுதலை செய்யப் பட்டனர். தேர்தலில் பிரச்சாரம் செய்வதற்கு முழுஉரிமை கொடுக்கப்பட்டது. சுதந்திரமான சூழ்நிலையில் தேர்தல் நடைபெற்றது. இந்திரா காந்தியும், சஞ்சய் காந்தியும் தோல்வியடைந்தார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சியை இழந்தது. ஜெயப் பிரகாசர் உருவாக்கிய ஜனதா கட்சி ஆட்சியைப் பிடித்தது.

## நெருக்கடி நிலை பற்றிய மதிப்பீடு

இந்திரா காந்தி நெருக்கடி நிலையை பிரகடனம் செய்தது பொருத்தமற்ற நடவடிக்கையாகும். தனது தேர்தல் செல்லாது என்று தீர்ப்பு வந்தவுடனேயே லோக் சபாவைக் கலைத்து தேர்தல் நடத்தியிருக்கலாம். அதே சமயம் எதிர்க் கட்சியினரும் மேல்முறையீட்டில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு காத்திருந்திருக்க வேண்டும். தீர்ப்பு இந்திராவுக்கு எதிராக இருந்தால் அதை நிறைவேற்றக் கோரியிருக்க வேண்டும். 1976 தேர்தலில் பங்கெடுக்கவும், அதற்கிடையில் இந்திராவைப் பற்றி மக்களிடம் பிரச்சாரம் செய்திருக்க வேண்டும்.

இந்திய மக்களும் அரசியல் தலைவர்களும் ஜனநாயகத்தில் ஆழமான நம்பிக்கை உள்ளவர்கள். இந்தியாவின் ஜனநாயகம் ஜெயப்பிரகாசின் முழுப் புரட்சிக்கு அல்லது இந்திராகாந்தியின் நெருக்கடி நிலைக்கு பலியாகவில்லை. அது முன்னைக் காட்டிலும் அதிக பலத்துடன் எழுந்தது. 1971-ம் வருட தேர்தலும், இந்திரா காந்தியின் தோல்வியும், எதிர்க்கட்சிகளின் வெற்றியும் இந்திய ஜனநாயகத்திற்கும், இந்திய மக்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

# 1.4 ஜனதா கட்சி
## (RULE OF JANATHA PARTY 1977-1980)

1977-ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் முடிவு சமகால இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது. இந்த தேர்தலில் காங்கிரஸ் தோல்வியடைந்தது. ஜெயப்பிரகாஷ் நாராயணனால் உருவாக்கப்பட்ட ஜனதாக் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. இந்தியா சுதந்திரம் அடைந்த 1947-ல் இருந்து 30 ஆண்டுகள் டெல்லியில் ஆட்சி செலுத்தி வந்த காங்கிரஸ் ஆட்சியை விட்டு இறங்கியது. முதன் முறையாக காங்கிரஸ் அல்லாத மந்திரி சபை பதவி ஏற்றது. பிரதமராக 1977மார்ச் 26-ல் மொரார்ஜி தேசாய் பதவியேற்றார். இந்த ஜனதா கட்சியின் ஆட்சி குறுகிய காலமே நீடித்தது. 1980-ம் இந்திராகாந்தி மீண்டும் பிரதமரானார்.

### ஜனதா கட்சியின் தோற்றம்

இந்திரா காந்தியின் அறிவிப்பின்படி 1977 மார்ச்சில் தேர்தல் நடத்துவதற்கான உத்தரவை குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமது வெளியிட்டார். நெருக்கடி நிலையின் போது சிறையில் அடைக்கப்பட்ட ஜெயப்பிரகாசரும் மற்ற கட்சித் தலைவர்களும் பாராளுமன்றத் தேர்தலில் இந்திராவைத் தோற்கடிக்க என்ன செய்யலாம் என்று ஆலோசித்தனர். நெருக்கடி நிலை கொண்டு வந்ததால் இந்திராவுக்கு கெட்ட பெயர் ஏற்பட்டுள்ளது. எனவே எதிர்க்கட்சிகளின் ஓட்டு சிதறாமல் இருந்தால் இந்திராவை சுலபமாக தோற்கடிக்கலாம் என்று ஜெய்ப்பிரகாசர் யோசனை தெரிவித்தார்.

அது மட்டுமல்லாமல் எல்லாக் கட்சித்தலைவர்களையும் அழைத்து ஒற்றுமையாக இருங்கள். ஒரே கட்சியாகச் செயல்பட்டு இந்திரா காந்தியைத் தோற்கடியுங்கள் என்றார். அதன்படி ஸ்தாபன காங்கிரஸ், ஜனசங்கம், சோசலிஸ்ட், லோக்தளம் ஆகிய நான்கு கட்சிகளும் ஜனதா கட்சி என்ற பெயரில் ஒன்றாக இணைந்தன. வேற்றுமைகளை மறந்து ஒரே சின்னத்தில் போட்டியிட முடிவு செய்தன.

இதே நேரத்தில் இதுவரை இந்திராவுடன் இருந்து பதவி சுகத்தை அனுபவித்த ஜெகஜீவன்ராம், எச்.என்.பருகுணா, நந்தினி சத்பதி, டி.என். திவாரி போன்றோர் காங்கிரசை விட்டு விலகி ஜனதா கட்சியில் சேர்ந்தனர்.

## பாராளுமன்றத் தேர்தல் : 1977, மார்ச்

1977-மார்ச் 16 முதல் 18 வரை ஆறாவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெற்றது. மொத்தம் உள்ள 542 தொகுதிகளில் 540 இடங்களுக்கான தேர்தல் நடைபெற்றது. நெருக்கடி நிலையைப் பற்றி மக்களுடைய கருத்தை அறிய இந்த தேர்தல் உதவியது. மக்கள் தாங்கள் நெருக்கடி காலத்தில் அடைந்த துன்பங்களை ஓட்டுக்கள் மூலம் வெளிப்படுத்தினர். உலகம் ஆவலுடன் எதிர்பார்த்த இந்ததேர்தலின் ஓட்டு எண்ணிக்கை மார்ச் 19-ல் நடைபெற்றது. ஜனதா கூட்டணி 299 தொகுதிகளில் வெற்றி பெற்றது. காங்கிரஸ் 153 தொகுதி களில் மட்டுமே வெற்றி பெற்றது.

ரேபரேலி தொகுதியில் போட்டியிட்ட இந்திர காந்தியை ராஜ் நாராயணன் 55 ஆயிரம் ஓட்டு வித்தியாசத்தில் தோற்கடித்தார். அமேதி தொகுதியில் போட்டி யிட்ட சஞ்சய் காந்தியும் தோற்கடிக்கப்பட்டார். இந்திரா காந்தி மந்திரி சபையில் இருந்தவர்களில் 32 பேர் தோல்வியடைந்தனர். மற்றும் காங்கிரஸ் முன்னணித் தலைவர்கள் பலரும் தோல்வியைத் தழுவினர். எதிர்கட்சியினர் இந்திராவின் தோல்வியைக் கொண்டாடினர். மக்களின் தீர்ப்பை மதித்து ஏற்றுக் கொள்வதாக இந்திராகாந்தி அறிவித்தார். வரலாற்றில் முதன் முறையாக காங்கிரஸ் அல்லாத பிரதமராக 81 வயதான மொரார்ஜி தேசாய் 1977, மார்ச் 24-ல் பதவி ஏற்றார். இது ஜனதா புரட்சி என்று அழைக்கப்படுகிறது.

## மொரார்ஜி தேசாய் வாழ்க்கைக் குறிப்பு

மொரார்ஜி தேசாய் 1896 பிப்ரவரி 29-ம் தேதி குஜராத்தில் பாடெலி என்ற கிராமத்தில் பிறந்தார். இவர் ஒரு பிராமணக் குடும்பத்தைச் சேர்ந்தவர். தேசாயின் முன்னோர்கள் பேஷ்வாக்களின் சமஸ்தானத்தில் நிர்வாகப் பிரிவில் பணியாற்றிய தேசாய் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். மொரார்ஜி தேசாய் தனது பள்ளிப்படிப்பை பல்சார் என்ற ஊரில் முடித்தார். பின்னர் பம்பாயிலுள்ள வில்சன் கல்லூரியில் சேர்ந்து 1917-ல் பட்டதாரியானார்.

கல்லூரிக் கல்வியை முடித்த மொரார்ஜி 1918 மே மாதம் அகமதாபாத்தில் துணைக் கலெக்டர் பணியில் சேர்ந்தார். ஆனால் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபாடு கொண்டார். எனவே தனது பதவியைத் துறந்து காந்தி ஆரம்பித்த உப்பு சத்யாகிரக போராட்டத்தில் ஈடுபட்டார். இதனால் கைது செய்யப்பட்டு இரண்டாண்டு சிறையில் அடைக்கப்பட்டார். 1937-ம் வருடம் பம்பாய் மாநிலத்தில் பி.ஜி.கேர் என்பவர் தலைமையிலான அமைச்சரவை யில் முதல் முறையாக விவசாய அமைச்சர் ஆனார்.

1957-ம் ஆண்டு நடைபெற்ற பம்பாய் மாநில சட்டமன்றத் தேர்தலில் புல்சார் என்ற தொகுதியில் போட்டியிட்டு வென்று பம்பாய் மாநில முதலமைச்சர் ஆனார். மொரார்ஜியின் நிர்வாகத்திறமையைக் கண்ட நேரு தனது மத்திய அமைச்சரவையில் நிதி அமைச்சராகச் சேர்த்துக் கொண்டார். ஆனால் விரைவிலேயே இருவருக்கும் கருத்து வேறுபாடு தோன்றியது. 1963-ல் காமராஜர் திட்டப்படி மொரார்ஜி தேசாய் மந்திரி பதவியிலிருந்து விலகினார்.

1964-ல் நேரு மரணம் அடைந்ததைத் தொடர்ந்து பிரதமர்ஆவதற்கு மொரார்ஜி விரும்பினார். ஆனால் அவர் ஆசை நிறைவேறவில்லை. லால் பகதூர் சாஸ்திரி பிரதமரானார். பின்னர் 1966 ஜனவரி மாதம் லால் பகதூர் சாஸ்திரி திடீர் மரணமானதால் பிரதமர் தேர்தல் நடந்தது. இந்திராவை எதிர்த்துப் போட்டியிட்டு தேசாய் தோல்வியடைந்தார். ஆனால் இந்திரா அமைச்சரவையில் மொரார்ஜி தேசாய் துணை பிரதமராகவும், நிதி அமைச்சராகவும் சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஆனால் கருத்து வேறுபாட்டின் காரணமாக அமைச்சரவையிலிருந்து விலகினார்.

1969-ல் அகில இந்திய காங்கிரஸ் பிளவுபட்ட போது மொரார்ஜி தேசாய் இந்திராவுக்கு எதிராக ஸ்தாபனக் காங்கிரசில் சேர்ந்தார். இந்திரா காந்தியின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சனம் செய்தார். 1965, ஜூன் 26-ல் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்ட போது பிற தலைவர்களுடன் மொரார்ஜி தேசாயும் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். பின்னர் 1977-ல் ஏற்பட்ட ஜனதா புரட்சியின் விளைவாக 81 வயதாள தேசாய் இந்தியாவின் நான்காவது பிரதமரானார். 14 ஆண்டுகளாக தேசாய் கண்டு வந்த பிரதமர் பதவி கனவு 1977-ல் பலித்தது.

மொரார்ஜி தேசாய் எளிமையானவர் கடவுள் பக்திமிக்கவர். நேர்மையானவர். ஆனால் தனது முடிவில் பிடிவாதபோக்கு உடையவர். சிறந்த காந்தியவாதியான மொரார்ஜி சிறந்த தேசபக்தர். இவரது தனிப்பட்ட வாழ்க்கையும் அப்பழுக்கற்றது.

## மொரார்ஜி தேசாயின் தலைமையிலான ஜனதா ஆட்சியின் செயல்பாடுகள்

### 1. மாநில சட்டமன்றங்கள் கலைப்பு

மொரார்ஜியின் தலைமையிலான புதிய ஜனதா அரசாங்கம் பதவிக்கு வந்த ஒரு மாதத்திற்குள் பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வி யடைந்த 9 மாநிலங்களின் சட்டப் பேரவைகளைக் கலைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. உள்துறை அமைச்சராக இருந்த சௌத்திரி சரண்சிங் இதில் தீவிரமாக இருந்தார். அதன் தொடர்ச்சியாக 1977- ஏப்ரல் 30ல் அரசியலமைப்பின் 356-வது ஷரத்தின்படி பஞ்சாப், அரியானா, இமாசல பிரதேசம், உத்திரப்பிரதேசம், பீகார், மத்திய பிரதேசம், ராஜஸ்தான்,

ஒரிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் சட்டப்பேரவைகள் கலைக்கப்பட்டன. தங்கள் அரசு கலைக்கப்பட்டதை எதிர்த்து சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதலமைச்சர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். ஆனால் உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகள் கொண்ட பெஞ்ச் அந்த வழக்கை தள்ளுபடி செய்தது. பின்னர் 1977-ஜூன் மாதம் அந்த மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் ஜனதா மற்றும் கூட்டணிக் கட்சிகள் வெற்றி பெற்றன. 1977 ஜூலை மாதம் நீலம் சஞ்சீவ ரெட்டி குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**2. சுருள்திட்டம் :** Rolling Plan

ஜனதா அட்சிக் காலத்தில் நேருவால் கொண்டுவரப்பட்ட திட்டமிட்ட பொருளாதார முறையில் சில மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அதாவது ஐந்தாண்டுத்திட்டத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு அதன் உள்ளிடு மாற்றப்பட்டது. இந்த புதிய திட்டமுறை சுருள் திட்டம் என்று அழைக்கப் பட்டது. இது ஆண்டுத் திட்டமாகும். இந்த சுருள்திட்டம் வளரும் நாடுகளுக்கு பொருத்தமானது என்று பொருளாதார வல்லுநர்கள் கருதுகிறார்கள்.

சுருள் திட்டத்தின் படி ஒவ்வொரு ஆண்டும் திட்ட இலக்குகளும், பொருள் ஆதாரங்களும் மாற்றியமைக்கப்படும். முக்கியமாக வறுமை ஒழிப்பு, வேலை வாய்ப்பை அதிகரித்தல், வருமான ஏற்றத் தாழ்வைக் குறைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் இலக்குகளை நிர்ணயம் செய்வது சுருள் திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.

இந்த சுருள்திட்டத்தின் அடிப்படையில் முதலில் 1978-79ம் ஆண்டுக் கான திட்ட வழிகாட்டு விதிகள் தயாரிக்கப்பட்டன. இந்த இலக்கின் அடிப்படையில் விவசாயத்திற்கு அதிக முன்னுரிமை கொடுத்து 1978-83ம் ஆண்டுக்களுக்கான ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் ஐந்தாண்டுத் திட்டங்களைக் கண்காணித்து அதனை மேம்படுத்துவதற்கான இலக்குகளையும், முதலீடுகளையும் மறு ஆய்வுக்குட் படுத்தி திட்டங்கள் செம்மையாகச் செயல்பட வழிவகை செய்யப்பட்டது.

ஆனால் இந்த சுருள் திட்டம் பலகுறைபாடுகளைக் கொண்டுள்ளது. இது தற்காலிகத் திட்டமாக உள்ளதாலும், நெகிழ்வுத் தன்மை உள்ளதாலும் இதனை நிறைவேற்றுவதற்கான ஆர்வம் குறைந்து காணப்பட்டது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் இலக்குகளை மறு ஆய்வு செய்வதற்கான புள்ளி விவரங்கள் சேகரிப்பதில் சிரமம் ஏற்பட்டது. மேலும் மத்தியிலும் மாநிலங் களிலும் இந்த சுருள்திட்டத்தை ஒருங்கிணைத்துச் செயல்படுத்துவது இந்தியா போன்ற பெரிய நாடுகளில் முடியாத காரியமாகும். வறுமை, வேலையின்மை போன்ற பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக ஜனதா

அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட சுருள்திட்டம் முழுமையாகவும் சிறப்பாகவும் செயல்படுத்தப்பட முடியாமல் போயிற்று.

## 3. அரசியலமைப்புத் திருத்தங்கள் :

ஜனதா ஆட்சியில், நெருக்கடி நிலை காலத்தில் இந்திராவால் கொண்டு வரப்பட்ட 42-ம் அரசியல் சட்டத்திருத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட பல மாற்றங்களை நீக்கும் எண்ணத்துடன் 43-ம், 44-ம் அரசியலமைப்புத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

43-ம் அரசியலமைப்புத் திருத்தத்தின்படி உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற ஆள் வரையின் மீது 42-ம் சட்டத்திருத்தம் கொண்டு அந்த கட்டுப்பாடுகளை நீக்கி, அவற்றைப் பழைய நிலைக்கே திரும்பக் கொண்டு சென்றது. தேசத்துரோக செயல்கள் தொடர்பாக பாராளுமன்றம் சட்டம் இயற்றலாம் என்ற 42-ம் திருத்தமும் ரத்து செய்யப்பட்டது.

44-ம் அரசியலமைப்புத் திருத்தத்தின்படி சொத்துரிமை அடிப்படை உரிமைப்பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது. சொத்திற்கான உரிமை சாதாரண சட்ட உரிமையாக்கப்பட்டது. மேலும் குடியரசுத் தலைவர் அமைச்சரவையின் ஆலோசனையை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று அமைச்சரவைக்குக் கூறலாம். ஆனால் குடியரசுத்தலைவர் அந்த மறுபரிசீலனையின் படியிலான ஆலோசனைப்படி செயல்படவேண்டும்.

மக்களவையில் கால அளவு 42வது திருத்தத்தின்படி ஐந்து ஆண்டிலிருந்து ஆறு ஆண்டுகளாக மாற்றப்பட்டிருக்கிறது. தற்போது அது மீண்டும் ஐந்து ஆண்டு கால அளவாக மாற்றம் செய்யப்பட்டது. அதே போல மாநில சட்ட மன்றங்களின் கால அளவும் மீண்டும் ஐந்து ஆண்டுகளாகப்பட்டது.

மேலும் இந்த 44-வது திருத்தத்தின்படி எழுத்துவடிவிலான அமைச்சரவையின் முடிவின் பேரில் மட்டுமே இனி குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலையை பிரகடனம் செய்ய முடியும். அத்துடன் நெருக்கடி நிலை பிரகடனம் பிறப்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் அது பாராளுமன்றத்தால் ஏற்கப்பட வேண்டும். மேலும் பாராளுமன்றத்தால் ஏற்கப்பட்ட பிரகடனம் ஆறுமாத கால அளவிற்கு மட்டுமே செயலில் இருக்கும். அப்படி பிரகடனம் செயலில் இருக்கும் காலத்தில் அடிப்படை உரிமைகள் நிறுத்தி வைக்கப்பட மாட்டாது.

இவ்வாறு 44-ம் சட்டத்திருத்தம் 42-ம் சட்டத் திருத்தத்தினால் கொண்டு வரப்பட்ட தேவையற்ற மாற்றங்களை நீக்கிவிட்டது. மேலும் மக்களாட்சி முறை மேம்பாட்டிற்கான முக்கியமாறுதல்களைக் கொண்டு வந்தது.

## 4. ஜனநாயகத்தை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் :

நெருக்கடி நிலை காலத்தில் செய்யப்பட்ட ஜனநாயக விரோத நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டன. அத்து மீறல்கள் அகற்றப்பட்டன.

a) முதலாவது, 1977, மார்ச் 27ல் 1971-ல் பிறப்பிக்கப்பட்ட வெளி நெருக்கடி நிலை ரத்து செய்யப்பட்டது. இதன்மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகள் மீட்கப்பட்டன.

b) நெருக்கடி நிலைகாலத்தில் சுதந்திரத்தை இழந்த பத்திரிக்கைகளுக்கு திரும்பவும் சுதந்திரம் அளிக்கப்பட்டது. பாராளுமன்ற நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் வெளியிடப்படுவதற்கு இருந்த தடை நீக்கப்பட்டன. பத்திரிக்கை கவுன்சில் அமைக்கப்பட்டது. அரசாங்கத்தைப் பற்றியோ அல்லது எதிர்க்கட்சிகள் பற்றியோ செய்திகள் வெளியிடும் பத்திரிக்கை களுக்கு எதிரான வழக்குகள் மேற்கொள்ளப்படவில்லை.

c) அகில இந்திய வானொலி மற்றும் தூர்தர்சன் போன்ற ஒலிபரப்பு சாதனங்கள் சுதந்திரமாகச் செயல்படுவதற்கான வழிமுறைகளை ஆய்வு செய்ய வர்க்கீஸ் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. அந்த கமிட்டியின் பரிந்துறையின் பேரில் 1976, மே -17ல் பிரச்சார் பாரதி மசோதா பாராளு மன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## ஜனதா அரசின் பிற நடவடிக்கைகள்

a) ஜனதா அரசு மதுவிலக்கு கொள்கையை அமல்படுத்த முனைந்தது. ஆனால் இதை நான்கு வருட காலத்தில் சிறிது சிறிதாக அமல்படுத்த நினைத்தது. இதைத்தவிர பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பாதுகாப்பிற்காக சிறுபான்மையினர் கமிஷன் ஒன்றை உருவாக்கியது. மாநில அரசுகளுக்கு மத்திய அரசு பிற்படுத்தப்பட்டோருக்கு எதிரான நடவடிக்கைகள் முற்றிலும் களையுமாறு அறிவுறுத்தியது.

b) மேலும் மத்திய அரசு பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் மீது கவனம் செலுத்தியது. பல ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தியது. ஜனதா அரசு அதிகார குவிப்பினை அகற்றி அதிகாரப் பகிர்வுக்கு வழிவகுத்தது. உள்ளாட்சிக் குழுக்களை பலப்படுத்துவதற்காக 1977-ல் அசோக்மேத்தா தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு 1978 ஆகஸ்டில் தனது அறிக்கையை சமர்ப்பித்தது.

c) பொருளாதாரத்தில் விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்பட்டு குறைக்கப்பட்டது. விலைவாசிகளையும் கள்ளப்பணத்தையும் கட்டுப்படுத்த 1000, 5,000, 10,000 ரூபாய் நோட்டுக்களை விலக்கிக் கொண்டது. 1977 நவம்பர் 17ல் ஜனதா அரசின் பொருளாதாரக் கொள்கையாக விவசாயத்துறை மற்றும் தொழில்துறையில் உற்பத்தியைப் பெருக்கி வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டிய வழிகளை கடைபிடித்தது. விவசாயம் மற்றும் தொழில்துறை இணைந்து முன்னேறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டது. 1977 நவம்பர் 15ல் ஜனதா கட்சியின் பொது செயலாளரான மதுலிமயே 40% முதலீடு விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சியில் ஈடுபடுத்தப்படும் எனக்கூறினார்.

d) ஜனதா அரசு அயல்நாட்டுக் கொள்கையில் அண்டை நாட்டுடன் நல்லிணக்கத்தை கடைப்பிடித்து அதன் வாயிலாக இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், பர்மா, சீனா, போன்ற நாடுகளுடன் நட்புறவை வளர்த்துக் கொண்டது. வல்லரசுகளான அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுடன் சுமூகமான உறவை ஏற்படுத்திக் கொண்டது. ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதனுடைய அங்கங்கள் இந்தியாவிற்கு தேவையான உதவியை வழங்கின.

## ஜனதா அரசின் வீழ்ச்சி : 1979

பெரும் ஆரவாரத்துடன் 1977, மார்ச் 24-ல் அமைக்கப்பட்ட மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா அரசு 2 வருடம் 5 மாதங்களில் 1979 ஜூலையில் ஒரு சிறிய முணுமுணுப்புடன் வீழ்ச்சியடைந்தது. இதற்கு அடிப்படையான காரணம் இந்திரா காந்தி மீது தேவையில்லாமல் எடுக்கப் பட்ட பழிவாங்கும் நடவடிக்கைகளும், உட்கட்சி பூசல்களுமே ஆகும்.

### 1. இந்திரா காந்தியின் மீதான வழிவாங்கும் நடவடிக்கைகள்

ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தது முதலே இந்திரா காந்தி மீது பல்வேறு பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இந்திராகாந்தி வெளி நாட்டுக்கு ஓடிப்போய் விடுவார் என்று கூறி அவரது பாஸ்போர்ட் முடக்கி வைக்கப்பட்டது.

இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது சாதாரண அதிகாரிகளுக்குரிய வீட்டில் தான் வசித்து வந்தார். இந்த வீடு பிரதமருக்குரிய பங்களா அல்ல. ஆனாலும் இந்த வீடு தேவைப்படுவதாகவும் உடனடியாக வீட்டை காலி செய்து கொடுக்கவேண்டும் என்று அதிகாரிகள் கெடுபிடி செய்தனர். வேறு வழியில்லாமல் தனது நீண்ட கால நண்பர் முகமது யூனுஸ் என்பவர் வீட்டிற்கு குடி சென்றனர்.

இந்திரகாந்தி உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற சிறப்பு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. இந்திரா இப்போது சாதாரண பிரஜை தான். எனவே குறைந்த அளவு பாதுகாப்பு போதும் என்று கூறிவிட்டார் தேசாய்.

அடுத்து ஜனதா அரசு பதவிக்கு வந்த இரண்டு வாரங்களுக்குள் நெருக்கடி நிலையின் போது நடந்த அத்து மீறல்கள் பற்றி விசாரணை நடத்த உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதி ஜே.சி.ஷா தலைமையில் 1977, ஏப்ரல் 7-ல் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டது. ஆறு மாதத்திற்குள் அறிக்கை தருமாறு இந்த கமிஷன் கேட்டுக் கொள்ளப்பட்டது. புதுடெல்லி பாட்டியாலா இல்லத்தில் விசாரணை துவங்கியது. இந்திரா மீது கடுமையான குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டன. 1977 நவம்பரிலும், 1978 ஜனவரியிலும் இந்திரா காந்தி விசாரிக்கப்பட்டார். இதே போல பல வழக்குகளில் இந்திராவை சிக்கவைப்பதற்காக பல விசாரணைக் கமிஷன்கள் அமைக்கப்பட்டன. விசாரணை என்ற பெயரில் இந்திரா பல ஊர்களுக்கு அலைக்களிக்கப்பட்டார். ஜனதா அரசின் இந்த பழிவாங்கும் செயல்கள் பொதுமக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியது.

அடுத்து எப்படியாவது இந்திராவை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று உள்துறை மந்திரி சரண்சிங்கும், சுகாதார மந்திரிராஜ் நாராயணனும் துடித்தனர். 1977, அக்டோபர் 3-ம் தேதி தேர்தல் பிரச்சாரத்திற்கு வர்த்தக நிறுவனங்களிடம் ஜீப்களைப் பெற்றதாகவும், பிரெஞ்சு நிறுவனம் ஒன்றுடன் பம்பாயில் பெட்ரோல் கிணறு தோண்ட செய்து கொண்ட ஒப்பந்தத்தால் அரசுக்கு 11 கோடி நஷ்டம் ஏற்பட்டதாகவும் கூறி இந்திரா கைது செய்யப்பட்டு கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டார். விசாரணையில் குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்று கூறி இந்திராவை நீதிபதி உடனே விடுதலை செய்தார்.

1978, நவம்பரில் நடைபெற்ற சிக்மகளூர் பாராளுமன்ற இடைத் தேர்தலில் இந்திராகாந்தி வெற்றி பெற்றார். ஆனால் அவரை எம்.பி. ஆக விடக்கூடாது என்று ஜனதா அரசு குறுக்கு வழியைப் பின்பற்றியது. முன்பு இந்திரா காந்தியிடம் விசாரணை நடத்தச் சென்ற அதிகாரிகளை கடமையைச் செய்ய விடாமல் தடுத்தார் என்றும், அது பாராளுமன்ற உரிமை மீறிய செயல் என்றும் அதற்காக அவரது எம்.பி.பதவியை ரத்து செய்து கூட்டத்தொடர் முடியும் வரை சிறையில் அடைக்கப்படவேண்டும் என்ற தீர்மானம் 1978-டிசம்பரில் பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதன்படி இந்திரா திகார் சிறையில் 1 வாரம் காவலில் வைக்கப்பட்டு பிறகு விடுதலை செய்யப்பட்டார். அவரது எம்.பி. பதவி ரத்து செய்யப்பட்டது.

இது தவிர இந்திரா மற்றும் அவரது அதிகாரிகள் நெருக்கடி நிலை காலத்தில் செய்த சட்ட விரோத நடவடிக்கைகளை விசாரிப்பதற்கு சிறப்பு கிரிமினில் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. 1979, ஜூன் 14ம் தேதியிலிருந்து அவை செயல்படத் தொடங்கின.

இந்திரா காந்தி பழிவாங்கப்படுவதாக மக்கள் நினைத்தார்கள். 'இந்திரா அம்மாவை பதவியலிருந்து இறக்கியது போதாதா, அவரை மேலும் துன்புறுத்த வேண்டுமா' என்று மக்கள் வருத்தப்பட்டார்கள். இது ஜனதா அரசின் மீதான நம்பிக்கையை மக்கள் இழக்கக் காரணமாக அமைத்தது.

## 2. ஜனதா அரசின் திறமையின்மை

ஜனதா அரசாங்கம் நவீன தொழில்துறை, நவீன விவசாயம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை போன்ற, நேருவின் திட்டங்களைப் புறக்கணித்தது. அதற்கு மாற்றாக ஜனதாகட்சி ஒரு வளர்ச்சித் திட்டத்தை முன் வைக்கவில்லை. ஏற்கனவே நிலச்சீர்திருத்தத்தைக் கோரிய ஜனதா கட்சி அதைக் கைவிட்டது. விவசாயத் தொழிலாளர்களுக்கான கூலி உயர்வும் கைவிடப்பட்டது. ஒரு ஆண்டு முடிந்த பிறகு தொழிற்துறை மற்றும் விவசாயத்துறையின் வளர்ச்சி குறைந்துவிட்டது. சில மாநிலங்களில் வறட்சி, சில மாநிலங்களில் வெள்ளம் ஏற்பட்டு விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டது. உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்தன. பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்ந்தது. மண்ணெண்ணெய் கிடைக்காமல் மக்கள்

துன்பப்பட்டார்கள். 1979-ன் முடிவில் பணவீக்கம் 20 சதவீதம் அதிகரித்திருந்தது.

## 3. ஜனதா கட்சியில் காணப்பட்ட உட்கட்சி பூசல்

ஆட்சி பீடத்தில் ஜனதா கட்சி அமர்ந்துவிட்ட போதிலும் அதன் தலைவர்கள் இடையே ஒற்றுமை இல்லாததால் மந்திரி சபையில் அடிக்கடி நெருக்கடி ஏற்பட்டது.

a) இந்திரா எதிர்ப்பு என்ற அடிப்படையில் அமைக்கப்பட்ட ஜனதா கட்சியில் ஒற்றுமை இல்லை. கட்சித் தலைவர்கள் முக்கியமான பதவிகளுக்குச் சண்டை போட்டார்கள். ஜனசங்கம் கட்சிக்கு லோக் சபாவில் 90 உறுப்பினர்கள் இருந்தார்கள். அது ஜனதா கட்சியில் இணைந்த பிறகும் தன் சுயத்தன்மையான வகுப்புவாதத்தை விட்டுவிட இழக்கவில்லை.

b) மத்தியிலும் மாநிலங்களிலும் கோஷ்டி சண்டைகள் தொடங்கின. ஜனசங்கம் பாடப்புத்தகங்கள் மற்றும் ஊடகங்கள் மூலம் தனது வகுப்பு வாதக் கருத்துக்களைப் பரப்பியது. கல்வி ஸ்தாபனங்களிலும் போலீஸ் துறை யிலும் தனது ஆதரவாளர்களைப் புகுத்தியது. ஸ்தாபன காங்கிரஸ் மதசார் பில்லாத ஆனால் பழமைவாதக் கட்சியாக இருந்தது. பி.எல்.டி. கட்சி பணக்கார விவசாயிகளின் கட்சி. அதற்கு அகில இந்தியப் பார்வை இல்லை. சோசலிஸ்டுகளிடம் சித்தாந்தம் இல்லை. பீகாரைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் அவர்களுக்குச் செல்வாக்கு இல்லை.

### மொரார்ஜி - சரண்சிங் மோதல்

இச்சமயத்தில் மொரார்ஜி தேசாய் மகன் காந்தி தேசாய் மீது ஊழல் புகார்கள் கூறப்பட்டன. இது பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று சரண்சிங் கடிதம் எழுதினார். விசாரணை நடத்த மொரார்ஜி மறுக்கவே சரண்சிங்கும், ராஜ் நாராயணனும் மந்திரி பதவியை ராஜினாமா செய்தனர். இதனால் ஜனதா கட்சி பிளவுப்பட்டது. மீண்டும் இருவரையும் மந்திரி சபையில் சேர்க்க எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தது. இதனால் ராஜ் நாராயணன் ஜனதா கட்சியை விட்டு விலகி ஜனத்ா (எஸ்) என்ற பெயரில் தனிக்கட்சி தொடங்கினார். ஜனதா கட்சியைச் சேர்ந்த 34 எம்.பிக்கள் ஜனதா (எஸ்) கட்சியில் சேர்ந்தனர்.

### மொரார்ஜி தேசாய் பதவி விலகுதல்

மொரார்ஜி தேசாயை கவிழ்த்து விட்டு பிரதமராக வேண்டும் என்று நீண்ட காலமாக திட்டமிட்டு வந்த சரண் சிங் இதுதான் சமயம் என்று ஜனதாக் கட்சியை உடைப்பதில் ஈடுபட்டார். மொரார்ஜி பதவி விலக வேண்டும் என்று சரண்சிங் கோஷ்டி போர்க்கொடி தூக்கியது. மொரார்ஜிக்கு எதிர்ப்பு தெரிவித்து 80 எம்.பிக்கள் ஜனதாவை விட்டு விலகி ராஜ் நாராயணன் கட்சியில் இணைந்தார்கள்.

இந்நிலையில் மொரார்ஜிக்கு மெஜாரிட்டி இல்லை என்று அறிந்து கொண்ட காங்கிரஸ் அவரது மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தது. 1979, ஜூலை 15ல் டெல்லி அரசியலில் பெரும் திருப்பம் ஏற்பட்டது. பதவியை விட்டு விலகுவதைத் தவிர வேறு வழி இல்லை என்ற முடிவுக்கு வந்த மொரார்ஜி அன்று மாலை குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டியைச் சந்தித்து ராஜினாமா கடிதம் கொடுத்தார்.

காங்கிரசைத் தோற்கடித்து விட்டு 1977, மார்ச் 24-ல் பிரதமராகப் பதவியேற்ற தேசாய் 2 வருடம் 5 மாதங்களில் பதவியை விட்டு விலகினார்.

## பிரதமராக சரண்சிங் :

இதற்கிடையில் ஜனசங்க உறுப்பினர்கள் ஜனதா கட்சியிலும் R.S.S. லிலும் உறுப்பினராக இருக்கலாமா என்ற பிரச்சனை எழுந்தது. இதனால் சரண்சிங் ஜனதாவை விட்டு விலகி ராஜ்நாராயணன் கட்சியில் சேர்ந்தார். இந்த சமயத்தில் சரண்சிங் மந்திரிசபைக்கு ஆதரவு கொடுக்கிறோம் என்று காங்கிரஸ் அறிவித்தது. உடனே சரண்சிங் குடியரசுத் தலைவர் சஞ்சீவ ரெட்டியைச் சந்தித்தார். 262 எம்.பிக்களின் ஆதரவு இருப்பதாகக் கூறினார். அதற்கான ஆதாரங்களையும் கொடுத்தார்.

அதன்படி 1979, ஜூலை 28-ல் பிரதமராகவும், காங்கிரசைச் சேர்ந்த துணைப் பிரதமராகவும் மற்றும் 17 அமைச்சர்களும் பதவி ஏற்றார்கள். ஆகஸ்ட் மூன்றாவது வாரம் பாராளுமன்றத்தில் மெஜாரிட்டியை நிரூபிக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் சரண்சிங்கிடம் கூறியிருந்தார். காங்கிரசின் ஆதரவுடன் தனது பலத்தை நிரூபிக்க முடியும் என்று சரண்சிங் நம்பினார்.

## சரண்சிங் வீழ்ச்சி

இந்நிலையில் சரண்சிங்கை தொடர்ந்து ஆதரிக்க இந்திரா காந்தி ஒரு நிபந்தனை விதித்தார். நெருக்கடி நிலை அத்துமீறல்கள் பற்றி விசாரிக்க மொரார்ஜி தேசாயால் இயற்றப்பட்ட சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வகை செய்யும் சட்டத்தை வாபஸ் பெறவேண்டும் என்றார். சரண்சிங் மறுக்கவே காங்கிரஸ் தனது ஆதரவை வாபஸ் பெற்றது.

வெறுத்துப் போன சரண்சிங் 1979, ஆகஸ்ட் 20ல் குடியரசுத் தலைவரைச் சந்தித்து தனது ராஜினாமா கடிதத்தைக் கொடுத்தார். மேலும் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தல் நடத்தும்படி கேட்டுக் கொண்டார்.

24 நாட்கள் பிரதமராக இருந்த சரண்சிங் ஒருநாள் கூட பாராளு மன்றத்தைச் சந்திக்காமல் பதவி விலகியது குறிப்பிடத்தக்கது. 1979 ஆகஸ்ட் 22-ல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. 1980-ல் புதிய பாராளு மன்றத்துக்கான தேர்தல் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சி பெரும் வெற்றி பெற்றது. 1980 ஜனவரி 14-ல் மீண்டும் பிரதம மந்திரியாகப் பதவியேற்றார் இந்திரா காந்தி.

## 1.5 நீல நட்சத்திர நடவடிக்கை (Operation Blue Star)

### அகாலி அரசியல்

இந்திய விடுதலைப் போராட்டத்தில் சீக்கியர்கள் பிரதான பங்கேற்றனர். இவர்களில் ஒரு பிரிவினர் சீக்கியரின் சமய சமுதாய அரசியல் நலன்களுக்காகப் போராடினார்! 1920ல் **அகாலி தளம்** (Akali Dal) தோற்றுவிக்கப்பட்டது. 1920லிருந்து 1925 வரை சீக்கியர்கள் '**ஆரிய சமாஜ**'த்தின் செல்வாக்கினின்றும் விடுபட்டுத் தங்களது தனித் தன்மையை நிலைநாட்டிக் கொள்ள '***சீக்கிய சபாக்கள்***' (Sikh Sabhas) அமைத்துத் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர். சீக்கியரது கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்த பிரிட்டிஷ் அரசாங்கம் 1925ல் **சிரோமணி குருதுவாரா பிரபந்தக் கமிட்டி** (Shiromany Gurdwara Prabandak Committee) அமைத்துக் கொள்ள அனுமதித்தது. இக்கமிட்டி பஞ்சாபிலுள்ள அனைத்து குருதுவாராக்களையும் ஒரு குடையின் கீழ் பராமரிக்கும் அதிகாரத்தைப் பெற்றது. அகாலி அரசியல் இந்த கமிட்டியை அச்சாணியாகக் கொண்டு சுழல ஆரம்பித்தது!

### பஞ்சாப் பிரச்னை

இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் *சீக்கியர்கள்* இந்திய ஒன்றியத்துக்குட்பட்டு சுயாட்சியுடன் கூடிய **பஞ்சாபி சுபா** (Punjabi Suba) கேட்டுப் போராடத் துவங்கினர். 1953–ல் **மாநிலங்கள் மறுசீரமைப்புக் குழு** அமைக்கப்பட்ட பின் *சீக்கியரது* 'பஞ்சாபி சுபா' கோரிக்கை போராட்டமாக உருவெடுத்தது. *சீக்கியர்* பஞ்சாபி மொழியோடு *சீக்கிய* சமயத்தையும் கலந்து கேட்ட தனி மாநிலக் கோரிக்கையை நேரு நிராகரித்தார். நேரு நிராகரித்த 'பஞ்சாபி சுபா' கோரிக்கையை இந்திரா காந்தி ஏற்றார் (1966)! இந்தி பேசும் **அரியானா** மற்றும் **இமாச்சலப் பிரதேசத்தைத்** தனி மாநிலங்களாக்கி *சீக்கியர்* பெரும்பான்மையினராயிருந்த **பஞ்சாப்** தனி மாநிலமாக உருவாக்கப்பட்டது. **தர்பாரா சிங்** (Darbara Singh) பஞ்சாப் முதலமைச்சரானார். ஆனால் அகாலிகள் அரியானாவின் பகுதியான ***சண்டிகர்*** பஞ்சாபின் தனித் தலைநகராக வேண்டும் என்றும், ரவி மற்றும் பியாஸ் நதிகளின் நீர் பஞ்சாப், அரியானா, ராஜஸ்தான் மாநிலங்களிடையே பகிர்ந்தளிக்கப் படவேண்டும் என்று கோரி தங்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்தினர். 1969 அக்டோபர் மாதம் இப்பிரச்னையை முன்வைத்து *சீக்கியரின்* மதிப்புக்குரிய **தர்ஷன் சிங் பெருமான்** (Darshan Singh Pheruman) உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்தார். மற்றொரு மக்கள் தலைவரான ***சந்த் பத்தே சிங்*** (Sant Fateh Singh) அமிர்தசரசில் தீக்குளிக்கப் போவதாக அச்சுறுத்தினார். சண்டிகரைப் பஞ்சாபுக்குக் கொடுத்துவிட்டு, பஞ்சாபின் ஒருபகுதியை சண்டிகருக்குக் கொடுக்க முன்வந்த இந்திரா காந்தியின் சமரசத் திட்டத்தை அகாலிகள் ஏற்கவில்லை. மாறாக **ஆனந்பூர் சாகிப் தீர்மானங்களை** நிறைவேற்றினர்! பஞ்சாப் பிரச்னை விசுவரூபமெடுத்தது. இந்திரா காந்தி *சீக்கியரின்* **பஞ்சாபி சுபா** கோரிக்கையை ஏற்றது குளவிக் கூட்டில் கைவிட்டது போலாயிற்று!

### ஆனந்பூர் சாகிப் தீர்மானங்கள்
### Anandpur Sahib Resolutions

பிரதமர் இந்திரா காந்தியின் சமரசத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாத அகாலிகள் 1973 அக்டோபர் மாதம் **ஆனந்பூர் சாகிப்** என்ற இடத்தில் கூடி தங்கள் கோரிக்கைகளுக்கு வடிவம் கொடுத்து சில தீர்மானங்களை நிறைவேற்றினர். இவை '**ஆனந்பூர் சாகிப் தீர்மானங்கள்**' என்று அழைக்கப்பட்டன. இத்தீர்மானங்களில்

எழுப்பப்பட்ட முக்கிய கோரிக்கைகளாவன: 1) அமிர்தசரஸ் நகருக்கு ரோமிலுள்ள **வாட்டிகண் நகர** (Vatican City) அந்தஸ்து கொடுக்க வேண்டும். 2) *சீக்கியர்கள்* இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்களில் பயணம் செய்யும் போது '**கிர்பான்**' என்ற குறுவாளினை உடன் கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டும். 3) **அகில இந்திய குருதுவாரச் சட்டம்** இயற்றப்பட வேண்டும். 4) பொற்கோயில் வளாகத்திற்குள் **ஹர்மந்திர் வானொலி நிலையம்** அமைக்கப்பட வேண்டும். 5) ***சண்டிகர் சீக்கியரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.*** 6) பஞ்சாபி மொழி பேசப்படும் பகுதிகள் பஞ்சாபுடன் இணைக்கப்பட வேண்டும். 7)வெளிநாட்டு விவகாரம், நாட்டுப் பாதுகாப்பு, நாணயச் செலாவணி, செய்தித் தொடர்பு ஆகிய மத்திய துறைகள் தவிர எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கு மாற்றப்பட வேண்டும். மத்திய–மாநில உறவுகள் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். 8) விவசாயத் தலைக்கட்டு வேலைகளைப் பற்றிய கட்டுப்பாடு தொடர்ந்து சீக்கியரிடமே இருக்க வேண்டும். 9) பக்ரா அணை நிர்வாகப் பொறுப்பு பஞ்சாபுக்கு மாற்றப்பட வேண்டும். 10)சீக்கியர்களுக்கு இராணுவத்தில் ஒதுக்கப்பட்ட விகிதாச்சாரம் தொடர்ந்து நீடிக்க வேண்டும். அகாலிகள் ஆனந்தபூர் சாகிப் தீர்மானங்களை சூழ்நிலைகளுக்கேறபக் கூட்டிக் குறைத்து, பெருக்கி வகுத்துப் போராடி வந்தனர்!

**அகாலிப் போராட்டம்**

பிரதமர் இந்திரா காந்தியின் முதல் ஆட்சிக் காலத்தில் (1966 – 1977) ஆனந்பூர் சாகிப் தீர்மானங்களை முன்வைத்துப் போராடிய அகாலிகள் **ஜனதா ஆட்சி** (1977 – 1980)யின் போது 'பஞ்சாப் பிரச்னை'யைப் பெரிதுபடுத்தவில்லை. அதற்குக் காரணம் அகாலி தளம் ஜனசங்கத்தோடு சேர்ந்து **பிரகாஷ் சிங் பாதல்** (Prakash Singh Badal) தலைமையில் பஞ்சாபை ஆட்சி செய்ததாகும் அதுமட்டுமல்ல. அகாலி தளம் மத்திய ஜனதா அரசாங்கத்திலும் இடம் பெற்றிருந்தது. 1980 தேர்தலில் அகாலிகள் தோல்வி அடைந்தபின் மீண்டும் பிரதமர் இந்திரா காந்திக்கு எதிராகப் போராட்டத்தைத் துவக்கினர்! **ஹர்சரண் சிங் லோங்கோவால், பிரகாஷ் சிங் பாதல், குர்சரண் சிங் தோரா** ஆகிய மும்மூர்த்திகள் போராட்டத்துக்குத் தலைமையேற்று நடத்தினர்.

அகாலிப் போராட்டத்துக்குப் பேச்சுவார்த்தை மூலம் அமைதித் தீர்வு காணும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டார் பிரதமர் இந்திரா காந்தி. 1981 அக்டோபர் முதல் 1984 மே மாதம் வரை 26 முறை சமரச விவாதக் கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்களில் 'அகாலி மும்மூர்த்திகள்' பங்கேற்றனர். இதற்கிடையே அகாலித் தலைவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ராஜீவ் காந்தியுடனும் அதிகார சார்பற்ற பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது! 1983 ஜனவரி 21ம் தேதி இந்திரா காந்தி அகாலிகள் கோரிக்கைகள் பற்றி எதிர்க் கட்சித் தலைவர்களுடன் கலந்து பேசினார். அதன்பின் ஆனந்பூர் சாகிப் தீர்மானங்களில் சிலவற்றை ஏற்பதாக அறிவித்தார் (பிப்ரவரி 27).

அகாலித் தலைவர்கள் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டே போராட்டத்தையும் தீவிரப்படுத்தி வந்தனர்! புதுப்புதுப் பிரச்னைகளைக் கிளப்பினர். எடுத்துக்காட்டாக **அரசியலமைப்புச் சட்டம் சரத்து 25(2)ல் "இந்துக்கள் என்றால் சீக்கியர், ஜைனர்கள், பௌத்தர்கள் ஆகியோரையும் குறிக்கும்"** என்ற பகுதியை நீக்க வேண்டும் என்று கோரினர். 1984 பிப்ரவரி மாதம் அகாலிகள் நடத்தியப் போராட்டத்தில் **அரசியலமைப்புச் சட்டம் கொளுத்தப்பட்டது**. முன்னாள் பஞ்சாப் முதலமைச்சர் பாதல் லாரி ஓட்டுநர் போன்று மாறுவேடம் அணிந்து டெல்லி சென்று டெல்லியின் மையப் பகுதியில் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தீக்கிரையாக்கினார் (பிப்ரவரி 26). அடுத்த

நாள் அவரும், மேலும் நால்வரும் அமிர்தசரசில் வெளிப்படையாக அரசியலமைப்புச் சட்டப் பக்கங்களைக் கொளுத்தினார்!

1984 மே மாதம் 23ம் தேதி அகாலி தீவிரவாதிகளில் மிதவாதியாகக் கருதப்பட்ட **லோங்கோவால்** உணவுப் பொருள்கள் பஞ்சாப்பை விட்டு வெளியே செல்வது நிறுத்தப்படும் என்றும், **வரிகொடா இயக்கம்** துவக்கப்படும் என்று கூறி போராட்டத்தைத் தீவிரப்படுத்தினார்! பிரதமர் இந்திரா காந்தி பஞ்சாப் பிரச்னையைத் தீர்ப்பதில் 'மிருதுவான அணுகுமுறை'யைக் கையாள்வதாகவும், 1971ல் பங்ளாதேஷ் போரில் காட்டிய உறுதியைத் தேச ஒருமைப்பாட்டுக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலை அடக்குவதில் காட்டவில்லை என்றும் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். அகாலிகளின் தீவிரவாதமும் பிந்தரான்வாலேயின் பயங்கரவாதமும் ஒருங்கிணைந்தன! பஞ்சாப் வெடிமருந்துக் கிடங்கானது!

**ஜர்னைல் சிங் பிந்தரன்வாலே**
**Jarnail Singh Bhindranwale**

பிந்தரன்வாலே கிராமத்துப் பூசாரியாக இருந்து பஞ்சாப் பயங்கரவாதியானார். இவர் தனது 30வது வயதில் (1977) **தம்தாமி தக்சல்** (Damdami Taksal) என்ற *சீக்கியத் தீவிரவாத மடாலயத்தின் தலைவரானார். இந்த சீக்கிய சமய அடிப்படைவாத அமைப்பு சீக்கிய சமயத்தை அதன் தூய்மை கெடாமல் இந்து சமயச் செல்வாக்கிலிருந்து காப்பாற்றக் கடுமையான விதிமுறைகளையும், நடத்தை ஒழுக்கக் கட்டுப்பாடுகளையும் கடைப்பிடித்தது. தீவிரவாதி பிந்தரான்வாலே 'தம்தாமி தக்சல்' அமைப்பைத் தனக்குச் சாதகமாகப்* பயன்படுத்திக் கொண்டு செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டார். பஞ்சாபில் **அகாலிதள – ஜனசங்கக் கூட்டணி ஆட்சியின்** போது சீக்கிய சமயத்துக்கு முரண்பட்டதாகக் கருதப்பட்ட **நிரன்காரிகள்** (Nirankaris) மீது தனது முதல் வன்முறைத் தாக்குதலைத் தொடுத்தார் பிந்தரான்வாலே (1978 ஏப்ரல்). அப்போது துவக்கப்பட்ட **தால் கல்சா** (Dal Khalsa) என்ற தீவிரவாத அமைப்பும் இவருடன் இணைந்தது. அகாலி அரசியலும் இத்துடன் கலந்தது. மதமும் அரசியலும் பிந்தரான்வாலே பயங்கரவாத நாணயத்தின் இரு பக்கங்களாயின.

பஞ்சாபில் அகாலிதள – ஜனசங்கக் கூட்டணியை முறியடிப்பதற்காகக் காங்கிரஸ் பிந்தரான்வாலேயைத் துரும்புச் சீட்டாகப் பயன்படுத்தியது. அப்போது அரசியல் செல்வாக்கு பெற்றிருந்த **சஞ்சய் காந்தியும்** பஞ்சாப் பிரபல காங்கிரஸ் தலைவருமான **கியானி ஜெயில் சிங்கும்** பிந்தரான்வாலேயின் பக்க பலத்தோடு 1980 தேர்தலில் அகாலிதள – ஜனதா கூட்டணியைத் தோற்கடித்தனர்! சமயச் சாமியாராயிருந்த பிந்தரன்வாலே செல்வாக்குமிக்க அரசியல் தலைவரானார். ஜெயில்சிங்கால் வெகுவாக ஊக்குவிக்கப்பட்ட பிந்தரன்வாலே விரைவிலேயே **கண்ணாடிக் குடுவையிலிருந்து வெளிப்பட்ட பூதமானார்** என்று குறிப்பிட்டுள்ளார் **தாரிக் அலி.**

குடுவையிலிருந்து வெளிப்பட்ட பிந்தரான்வாலே பூதம் **புது *சீக்கியத்*** (Neo-Sikhism)தின் போதகரானார். *சீக்கிய சமய* நம்பிக்கை, இனப்பெருமை, மொழிப்பற்று, *சமூகச் சடங்குகள்* ஆகியவற்றோடு *தீவிரவாதத்தையும்* குழைத்துக் கொடுத்தார். மாவோயிச *சீக்கிய* ஆதரவாளர்கள், போலீசாரின் அடக்குமுறைக்கு ஆளாகி அந்நியப்பட்டுப் போயிருந்தோர், முன்னாள் நக்சலைட்டுகள், துடிப்பான *சீக்கிய* இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் பிந்தரான்வாலேயின் தீவிரவாதத்தால் கவரப்பட்டனர். பிந்தரன்வாலே *சீக்கியர்களை* அநீதிகளின் பிடியிலிருந்து விடுவிக்கும் அவதார

புருஷராகக் காட்சியளித்தார்! பஞ்சாப் பிராந்திய – பிரிவினை வெறி புத்துயிர் பெற்றது. காலிஸ்தான் கோரிக்கை தீவிரமடைந்தது!

## காலிஸ்தான் கோரிக்கை

வெளிநாடுகளில் வாழ்ந்த *சீக்கியர்கள்* தான் முதலில் **காலிஸ்தான்** (Khalistan) கோரிக்கையை எழுப்பினர். இந்தியாவில் *சீக்கியர்களுக்கான* **இறையாண்மை** (Sovereignty)யுடைய தனி சுதந்திர நாடு உருவாக்கப்பட வேண்டுமென்பதே காலிஸ்தான் கோரிக்கையின் கருப்பொருளாகும். 1980–ம் ஆண்டில் டாக்டர் **ஜகித் சிங் சௌகான்** (Dr.Jagit Singh Chouhan) என்ற *சீக்கியர்* லண்டனில் அவரது தலைமையில் **'காலிஸ்தான் தேசிய கவுன்சில்'** (National Council of Khalistan) என்ற அமைப்பை உருவாக்கிக் காலிஸ்தான் இயக்கத்தை வெளிநாடுகளில் பரப்பினார். இவரைப் போன்றே அமெரிக்காவில் **கங்கா சிங் தில்லான்** (Ganga Singh Dillon) வாஷிங்டனில் அவரது தலைமையில் **'நான்கானா சாகிப் நிறுவனம்'** (Nankana Sahib Foundation) என்ற அமைப்பைத் தோற்றுவித்து காலிஸ்தான் கோரிக்கைக்கு ஆதரவு திரட்டினார். இதைப்போன்றே **பபார் கல்சா** (Babhar Khalsa) என்ற அமைப்பு கனடாவிலிருந்து செயல்பட்டது. இந்த அமைப்புகள் அனைத்தும் இந்தியாவில் காலிஸ்தான் ஆதரவாளர்களுக்கு நிதியையும் போர்த் தளவாடங்களையும் அனுப்பி உதவின. வெளிநாட்டு வாழ் *சீக்கியர்களின்* ஆதரவாலும், உதவியாலும் வெகுவாக ஊக்குவிக்கப்பட்ட பிந்தரன்வாலே பஞ்சாபில் வாழ்ந்த இந்துக்களை விரட்டிவிட்டு, அரியானா, ராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், பிகார் ஆகிய மாநிலங்களில் குடியேறி வாழ்ந்து வந்த *சீக்கியர்களைப்* பஞ்சாப்புக்குக் குடியிறக்கி, சுதந்திர காலிஸ்தானை உருவாக்கத் திட்டமிட்டார்! பயங்கரவாதத்தின் மூலம் இத்திட்டத்தைச் செயல்படுத்தத் துவங்கினார்.

## கிளர்ச்சிக் காடு

பிந்தரன்வாலே கட்டவிழ்த்துவிட்ட பயங்கரவாதம் பஞ்சாப்பைக் கிளர்ச்சிக் காடாக்கிற்று. 1980 ஏப்ரல் மாதம் நிரன்காரித் தலைவர் **குர்பச்சன் சிங்** டெல்லியில் அவரது இல்லத்திலேயே கொலை செய்யப்பட்டார்! பிந்தரன்வாலேயின் நிரன்காரி எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கண்டித்து எழுதிய இந்துவான மூத்த பத்திரிக்கையாளர் **லாலா ஜகத் நாராயண்** சுட்டுக் கொல்லப்பட்டார் (செப்டம்பர் 9). பிந்தரன்வாலாவுக்கெதிராகப் **'பிடி வாரண்ட்'** பிறப்பிக்கப்பட்டதால் அவர் அரியானாவுக்குத் தப்பிச் சென்றார் (செப்டம்பர் 13). ஒரு வாரத்துக்குப் பின் சரணடைந்த பிந்தரன்வாலே கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் (செப்டம்பர் 20). இவர் கைது செய்யப்பட்டதால் பஞ்சாப்பில் பெரிய கலவரம் ஏற்பட்டது. பஞ்சாப் முதலமைச்சர் **தர்பாரா சிங்குக்கும்** மத்திய உள்துறை அமைச்சராயிருந்த **கியானி ஜெயில் சிங்குக்குமிடையேயான** தனிப்பட்ட விரோதம் பிந்தரன்வாலேக்கு சாதகமாக இருந்தது. ஜெயில் சிங்கின் உத்தரவின் பேரில் பிந்தரன்வாலே விடுதலை செய்யப்பட்டார் (அக்டோபர் 15)! பிந்தரன்வாலே சண்டிகருக்குத் தப்பிச் சென்றதற்கும் பின்னர் விடுதலையானதற்கும் ஜெயில் சிங் உதவியாக இருந்ததாகக் குற்றம் சாட்டினார் பஞ்சாப் முதலமைச்சர் தர்பாரா சிங். அகாலி தளத்தைப் பலவீனப்படுத்தவே பிந்தரன்வாலே விடுதலை செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார் தாரிக் அலி. பிந்தரன்வாலேயின் நிபந்தனையற்ற விடுதலை அவரைப் பெருந் தலைவராக்கி விட்டது என்று குறிப்பிட்டுள்ளார் பி.சி.அலெக்சாண்டர்.

விடுதலை செய்யப்பட்ட பிந்தரன்வாலே பயங்கரப் போராளியானார். துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பாளர்கள் புடைசூழ பகிரங்கமாகப் பவனி வந்தார்; காங்கிரசுடன்

தனக்கிருந்த உறவை முறித்துக் கொண்டார்; காலிஸ்தான் கோரிக்கையை உரக்க எழுப்பினார். 1982–ம் ஆண்டுத் துவக்கத்தில் ஏற்பட்ட இந்து – சீக்கிய இனக் கலவரத்தில் பலர் இறந்தனர். தால் கல்சாவும், காலிஸ்தான் தேசிய கவுன்சிலும் தடை செய்யப்பட்டன. பயங்கரவாதிகள் 'படுகொலைப் பட்டி'யலில் இறங்கினர். கொலைப் பட்டியல் (Hit List) வெளியிடப்பட்டு கொலைகள் செய்யப்பட்டன! அகாலித் தலைவர்கள் பயங்கரவாதப் படுகொலைகளைக் கண்டிப்பதற்குப் பதிலாக அரசாங்கத்துக்கு எதிராக 'தர்மயுத்தம்' துவங்கினர்! டில்லியிலிருந்து அமிர்தசரஸ் வழியாக ஸ்ரீநகர் சென்ற இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் கடத்தப்பட்டது (ஆகஸ்ட் 4). இரண்டு வாரங்களுக்குப் பின் ராஜஸ்தான் ஜோத்பூரிலிருந்து டெல்லி சென்ற விமானம் கடத்தப்பட்டது. ஜலந்தரில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த முன்னாள் முதலமைச்சர் தர்பாரா சிங் வெடிகுண்டுத் தாக்குதலிலிருந்து தப்பினார். பொற்கோயிலுக்கருகே நடந்த தசரா ஊர்வலம் குண்டுகள் வீசித் தாக்கப்பட்டது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் (1983 – 84) பஞ்சாப் கிளர்ச்சிக் காடாயிற்று. குண்டு வெடிப்புகள், கொலைகள், கொள்ளைகள் அன்றாட நிகழ்ச்சிகளாயின. பொற்கோயிலில் பிரார்த்தனை செய்து விட்டுத் திரும்பிய போலீஸ் உயர் அதிகாரி ஏ.எஸ்.அட்வால் பட்டப் பகலில் சுட்டுக் கொல்லப்பட்டது (1983 ஏப்ரல் 25) நாட்டை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

1984–ம் ஆண்டில் பஞ்சாப் பயங்கரவாதம் உச்ச கட்டத்தை எட்டியது. மாநிலத்தில் தொடர்ச்சியான குண்டுவெடிப்பு நிகழ்ச்சிகள் நடந்தன. மத்திய அரசாங்க அதிகாரிகளும் அலுவலகங்களும் குறிவைத்துத் தாக்கப்பட்டன. ரயில் நிலையங்களுக்குத் தீ வைக்கப்பட்டது (ஜனவரி 28). இந்து கோயில்கள் சேதப்படுத்தப்பட்டன; பலர் கொல்லப்பட்டனர் (பிப்ரவரி 21). பிரபல அரசியல் தலைவர்கள் தாக்கப்பட்டனர் (மார்ச் 9, 27). வங்கிகள் கொள்ளையடிக்கப்பட்டன. பெரோஸ்பூரில் கல்லூரி முதல்வர் சுட்டுக் கொல்லப்பட்டார் (ஏப்ரல் 1). அடுத்த நாள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட பாஜக தலைவருமான **ஹர்பன்ஸ் லால் கன்னா** சுட்டுக் கொல்லப்பட்டார். பிந்தரன்வாலே ஆதரவாளர்களுக்கும் லோங்கோவால் ஆதரவாளர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டதால் (ஏப்ரல் 13) இரு தலைவர்களுக்கிடையே விரிசல் ஏற்பட்டது. பஞ்சாப் போலீஸ் செயலிழந்தது. **மத்திய போலீஸ் படையினர்** (CRPF) **'மோகா'** குருத்வாராவில் ஒளிந்திருந்த பயங்கரவாதிகளை விரட்டியடித்து ஆயுதங்களைக் கைப்பற்றினர் (மே 3). பிந்தரன்வாலே பொற்கோயிலுக்குள் ஏராளமான ஆயுதங்களைக் குவித்து வைத்துக் கொண்டு ஒரு **இணை அரசாங்கத்தை** (Parallel Government) நடத்திக் கொண்டிருந்தார்! பஞ்சாபில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்கெட்டது. மத்திய அரசாங்கம் அகாலித் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியடைந்ததால் பஞ்சாப் பயங்கரவாதத்தை முறியடிக்க இராணுவ நடவடிக்கை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற சூழ்நிலை உருவாயிற்று.

### நீல நட்சத்திர நடவடிக்கை
### Operation Blue Star

பிந்தரான்வாலேயின் பிரிவினை பயங்கரவாதம் உச்சகட்டத்தை எட்டிய போது 1983 அக்டோபர் 6–ம் தேதி பஞ்சாபில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது. பஞ்சாப் கலவரப் பகுதியாக அறிவிக்கப்பட்டது. 'இராணுவப் படைகள் சிறப்பதிகாரங்கள் அவசரச் சட்டம்' (Armed Forces Special Powers Ordinance) நடைமுறைப்படுத்தப்பட்டது (அக்டோபர் 15). இவற்றையும் மீறி பயங்கரவாதம் மேலும் மோசமாகப் பரவியது. சமரசப் பேச்சுக் கதவுகள் அனைத்தும் அடைக்கப்பட்டுவிட்டன. எனவே, 1984 மே 25–ம் தேதி

பிரதமர் இந்திரா காந்தி இராணுவ நடவடிக்கை எடுக்க முடிவு செய்தார். அவர் நாட்டு மக்களுக்கு வானொலி – தொலைக்காட்சி மூலம் நிகழ்த்திய உரையில் 'பஞ்சாபியர் இரத்தம் சிந்துவதை நிறுத்தி வெறுப்பைக் கைவிட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்.

1984 ஜூன் 3–ம் தேதி இந்திய இராணுவம் பஞ்சாபுக்குள் நுழைந்தது. பயங்கரவாதிகளின் புகலிடங்கள் என்று சந்தேகப்பட்ட இடங்களை இராணுவத்தினர் சூழ்ந்து கொண்டனர். 35 குருதுவாராக்கள் முற்றுகையிடப்பட்டன. பொற்கோயிலுக்கு வெளியே நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அதன்பின் பொற்கோயில் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டது. கோயிலுக்குள்ளிருந்த பயங்கரவாதிகள் சரணடைந்து விடுமாறு எச்சரிக்கப்பட்டனர். எச்சரிக்கை பயனின்றிப் போகவே இராணுவத்தின் சிறப்புப் படையினர் (Cammandos) 1984 ஜூன் 5–ம் தேதி இரவு பொற்கோவிலுக்குள் நுழைந்தனர். இராணுவத்தினருக்கும், சீக்கியப் போராளிகளுக்குமிடையே நடைபெற்ற 24 மணி நேர சண்டையில் **'அகால் தக்த்'தில் இருந்த பிந்தரன்வாலேயும் அவரது சகாக்களும் கொல்லப்பட்டனர்.** இத்துப்பாக்கிச் சண்டையின் போது பக்தர்கள் பலரும் உயிரிழந்தனர். 'நீல நட்சத்திர நடவடிக்கை' என்பது இராணுவத்தினர்த் தாக்குதலுக்குக் கொடுக்கப்பட்ட குறியீட்டுப் பெயராகும் (Code Name). பஞ்சாப் பயங்கரவாதம் முறியடிக்கப்பட்டது.

**விளைவுகள்**

பஞ்சாப் பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட நீல நட்சத்திர நடவடிக்கை பல விபரீத விளைவுகளை ஏற்படுத்தியது. 1) இராணுவ நடவடிக்கையில் பிந்தரன்வாலே கொல்லப்பட்ட (ஜூன் 7) செய்தி அறிந்த ராஜஸ்தான் கங்கா நகரில் இருந்த சீக்கிய ஜவான்கள் கிளர்ச்சியில் இறங்கினர்! பின்னர் பீகார், ஜம்மு–காஷ்மீர், தானே, புனே ஆகிய இடங்களிலும் சீக்கிய இராணுவ வீரர்கள் கலகம் செய்தனர். புதிதாக இராணுவத்தில் சேர்ந்த சீக்கிய ஜவான்கள் துவக்கிய கிளர்ச்சி விரைவில் கட்டுப்படுத்தப்பட்டது. 2) பிந்தரன்வாலேக்குப் பிறகு பொற்கோயில் பூசாரிகள் தீவிரவாதிகளாகச் செயல்பட்டனர்! **உலக சீக்கியர் மாநாட்டைக் கூட்டி** (செப்டம்பர் 2)செப்டம்பர் 30 ஆம் தேதிக்குள் இராணுவம் பொற்கோயிலைவிட்டு வெளியேற வேண்டும் என்று காலக்கெடு கொடுத்தனர். இராணுவ நடவடிக்கைக்குப் பின்னரும் தீவிரவாத நிலையில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை என்பதை இந்நிகழ்வு எடுத்துக்காட்டியது. 3)இராணுவத் தாக்குதலின் போது சிதைவுபட்ட **'அகால் தக்த்'**தைப் பழுதுபார்த்து புதுப்பிக்கும் பணியை இராணுவத்தினரே **'நிகாங்குகள்'** (Nihangs) என்ற சீக்கிய மதப் பிரிவினரின் தலைவர் **பாபா சந்தா சிங்கின்** துணையுடன் மேற்கொண்டனர். இதைப் பொற்கோவில் பூசாரிகளும் பஞ்சாப் சீக்கியரும் சீற்றத்துடன் எதிர்த்தனர். 4) பஞ்சாப் பயங்கரவாதிகள் இந்திய விமானங்களை இருமுறை (ஜூலை 5, செப்டம்பர் 2) கடத்தினர். விமானக் கடத்தல்களை இந்திய அரசாங்கம் கையாண்ட முறையை அகாலிகளும், தீவிரவாதிகளும் தூற்றினர். 5) பொற்கோயிலைப் பூசாரிகளிடமே ஒப்படைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்ட போது சில பயங்கரவாதிகள் பொற்கோயிலுக்குள்ளிருந்து காலிஸ்தான் கோரிக்கையை எழுப்பினர் (செப்டம்பர் 28–29); கோயில் வளாகத்துக்குள் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் ஏற்பட்டன (அக்டோபர் 1). பின்னர் இராணுவம் கோயில் வளாகத்தில் இருந்து முழுவதுமாக விலக்கிக் கொள்ளப்பட்டது (அக்டோபர் 8). 6)புனிதப் பொற்கோயிலைப் பயங்கரவாதிகளின் புகலிடமாகச் செயல்பட அனுமதித்த அகாலிகளும், சீக்கியரும் இராணுவ நடவடிக்கையைத் தங்கள் நெஞ்சில் குத்திய முள்ளாகக் கருதினர்.

இலண்டனிலிருந்த காலிஸ்தான் இயக்கத் தலைவர் ஜகீத்சிங் சௌகான் **"இந்திரா காந்தியின் நாட்கள் எண்ணப்பட்டுவிட்டன"** என்று அறிவித்தார்!

**மதிப்பீடு**

நேருவின் ஆட்சிக் காலத்தில் நீருபூத்த நெருப்பாக இருந்த பஞ்சாப் பிரச்னை இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் பயங்கரவாதத் தீயாகப் பரவியது. அரசியல் ஆதாயத்துக்காக அகாலி தளமும் காங்கிரசும் போட்டி போட்டுக் கொண்டு பிந்தரன்வாலேயைப் பயன்படுத்திக் கொள்ள முற்பட்டது **"சங்கை ஊதிக் கெடுத்தது"** போலாயிற்று. பஞ்சாப் காங்கிரஸ் உட்கட்சிப் பூசலும், பதவிப் போட்டியும், பரஸ்பர பொறாமையும், அகாலித் தலைவர்களின் சந்தர்ப்பவாத அரசியலும் **'பிந்தரன்வாலே பயங்கரவாதம்'** பலம் பெறக் காரணமாயிற்று. ஜனதா ஆட்சிக் காலத்தில் அடங்கியிருந்த அகாலிகள் இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தில் ஆக்ரோஷத்துடன் செயல்பட்டனர்! இவர்கள் பிந்தரன்வாலேயின் அத்துமீறிய வன்முறை நடவடிக்கைகளைக் கண்டித்துத் தடுக்காமல் இந்திரா காந்தி தொடர்ந்து மேற்கொண்ட சமாதான சமரச முயற்சிகளுக்கும் ஒத்துழைப்பு கொடுக்கவில்லை. இராணுவ நடவடிக்கை தவிர்க்க முடியாததாயிற்று.

சமகால இந்திய வரலாற்றில் நீல நட்சத்திர நடவடிக்கை சர்ச்சைக்குரிய விவாதப் பொருளாயிற்று. பொற்கோயிலை இராணுவம் முற்றுகையிட்டுத் தாக்கியதைப் பற்றிய பல வினாக்களுக்கு இன்றைக்கும் சரியான விடை கிடைக்கவில்லை. நீல நட்சத்திர நடவடிக்கையைத் திட்டமிட்ட இராணுவத் தளபதி ஏ.எஸ்.வைத்யாவும், அதைச் செயல்படுத்திய லெப்டினன்ட் தளபதி கே.சுந்தர்ஜியும் பிரதமரிடம் கொடுத்த வாக்குறுதியை மீறித் **'தாக்குதல் திட்ட'**த்தில் மாற்றம் செய்ததும், பொற்கோயிலுக்குள்ளிருந்த பயங்கரவாதிகளின் உண்மையான பலம் பற்றிய தெளிவான தகவலின்றி நடவடிக்கை எடுத்ததும் விபரீத விளைவுகளுக்குக் காரணம் என்று கூறுகிறார் பிரதமரின் பிரதானச் செயலாளராயிருந்த பி.சி.அலெக்சாண்டர். ***'சீக்கிய கோமேனி'*** (Sikh Khomeini) என்று வர்ணிக்கப்பட்ட பிந்தரன்வாலேயின் பயங்கரவாத முயற்சியை முளையிலேயே கிள்ளாமல் விட்டது **"இளைதாக முள்மரம் கொல்க; களையுநர் கைகொல்லும் காழ்த்த விடத்து"** (குறள், 879) என்ற முதுமொழியை மெய்ப்பிப்பதாக உள்ளது.

நீல நட்சத்திர நடவடிக்கை நன்கு திட்டமிடப்பட்டு சரியாகச் செயல்படுத்தப்படாத இராணுவத் தாக்குதல் என்று கூறுகிறார் பி.சி.அலெக்சாண்டர். சரியாகக் கணிக்கப்படாத சோக சம்பவம் என்று கருதுகிறார் ஜே.என்.தீக்ஷித். பொற்கோயிலுக்குள் இராணுவத்தை அனுப்பியது ரோமிலுள்ள புனித பீட்டர்ஸ் அல்லது மெக்காவிலுள்ள காபாவுக்குள் 'டாங்கு'களை அனுப்புவதற்குச் சமம் என்று குறிப்பிட்டுள்ளார் காத்தரின் பிராங். மாறாக, நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்காக இந்திரா காந்தி மேற்கொண்ட துணிகரமான செயலே இந்த இராணுவ நடவடிக்கை என்ற கருத்தைக் கூறுகிறார் நிகில் சக்கரவர்த்தி. நீல நட்சத்திர நடவடிக்கைக்காக இந்திரா காந்தி நிந்திக்கப்பட்டாலும் அவரது முடிவை எதிர்க்கட்சிகளும், பத்திரிக்கைகளும், பொது மக்களும் வரவேற்றுப் பாராட்டியதாகக் குறிப்பிட்டுள்ளார் பூபுல் ஜெயகர். இந்த நிகழ்வு இந்திய அரசாங்கம் பிரிவினை வாதத்தையும், பயங்கரவாதத்தையும் புறங்கண்டு, தேச ஒற்றுமையைக் காத்து, சமயச் சார்பின்மையை நிலை நாட்டக் கூடிய வல்லமை பெற்றது என்று நிரூபித்ததாகக் கூறியுள்ளார் பியன் சந்திரா.

# 1.6 இந்திராகாந்தி
## (ADMINISTRATION OF INDIRA GANDHI 1980-1984)

ஜனதா ஆட்சிக் காலத்தில் இந்திரா காந்தி மீது பழிவாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் மக்களின் ஆதரவு இந்திராவுக்கு கிடைத்தது. பதவியில் இல்லாத இந்திராவை ஏழைகள் தங்கள் பாதுகாவலராகக் கருதினார்கள். மோசமான ஆட்சி முறையாலும் உள்கட்சி சண்டையாலும் ஜனதா கட்சி ஆட்சியை இழந்தது. 1980 ஜனவரியில் நடைபெற்ற தேர்தலில் ஜனதா ஆட்சியையும், இந்திரா ஆட்சியையும் மதிப்பிட்டு மீண்டும் காங்கிரசுக்கு வெற்றியை தேடிக் கொடுத்தார்கள். முப்பத்து நான்கு மாதங்களுக்குப் பிறகு இந்திரா காந்தி மறுபடியும் பிரதமரானார்.

### 1980-ம் வருட பொதுத் தேர்தல்

பாராளுமன்றத்தைச் சந்திக்காமலேயே பிரதமர் பதவியை சரண்சிங் ராஜினாமா செய்த பிறகு பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் 1980-ஜனவரியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. மீண்டும் ஆட்சிக்கு வர இது ஒரு அரிய சந்தர்ப்பம் என்பதை இந்திரா உணர்ந்திருந்தார். எனவே இந்தியா முழுவதும் மின்னல் வேகச் சுற்றுப்பயணம் செய்து பிரச்சாரம் செய்தார். 62 நாட்களில் மொத்தம் 40 ஆயிரம் மைல் சுற்றுப் பயணம் சென்றார்.

'வேலை செய்கின்ற அரசாங்கத்துக்கு வாக்களியுங்கள்' என்று இந்திரா காந்தி மக்களைக் கேட்டுக் கொண்டார். ஜனதா கட்சியின் அரசாங்கத்தைப் பற்றி வெறுப்படைந்த மக்கள் இந்திரா காங்கிரசை ஆதரித்து வாக்களித்தார்கள். காங்கிரஸ் மகத்தான வெற்றி பெற்றது. பாராளுமன்றத்தில் மொத்தம் உள்ள 525 இடங்களில் 351 இடங்களை காங்கிரஸ் கைப்பற்றியது. அதாவது மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி கிடைத்தது.

இந்திரா காந்தி உத்திரப்பிரதேசத்தில் உள்ள ரேபரேலி, ஆந்திராவிலுள்ள மேடக் ஆகிய இரு தொகுதிகளிலும் போட்டியிட்டு அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

## பிரதமராகப் பதவி ஏற்றல் : 1980, ஜன 14

மீண்டும் பிரதமராக இந்திரா காந்தி ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1980, ஜனவரி 14-ல் நான்காவது முறையாக இந்திரா காந்தி பதவி ஏற்றார். குடியரசுத்தலைவர் சஞ்சீவரெட்டி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். ஜெயில்சிங், வெங்கட்ராமன், பிரணாப் முகர்ஜி, பி.வி. நரசிம்மராவ் போன்ற 18 பேர் கேபினெட் மந்திரிகளாகவும், 6 பேர் இணை அமைச்சர்களாகவும் பதவி ஏற்றனர்.

மீண்டும் பிரதமராகப் பதவி ஏற்ற இந்திரா நெருக்கடி நிலையின் போது நடந்த தவறுகளுக்கு வருத்தம் தெரிவித்தார். இனி இப்படித் தவறுகள் நடக்காது என்று உறுதியளித்தார்.

ஆனால் மறுபடியும் பிரதமரான இந்திராவிடம் பழைய சுறுசுறுப்பு இல்லை. நிர்வாகத்தை நெறிப்படுத்தும் ஆற்றல் இல்லை. அவருக்கு சவால் விட யாரும் இல்லையென்றாலும் முக்கியமான பிரச்சனைகளை அவர் உறுதியாகத் தீர்க்கவில்லை.

ஜனதா ஆட்சியின் போது அரசியல் அனுபவம் நிறைந்த முக்கியமான காங்கிரஸ் தலைவர்கள் அவரை கைவிட்டார்கள். இப்போது அவரைச் சுற்றியிருந்தவர்களிடம் அனுபவம் இல்லை. திறமை இல்லை. அவர்களுக் கென்று அரசியல் தளங்கள் இல்லை. எப்பொழுதும் இந்திரா தனது மகன் சஞ்சய் காந்தியை மட்டுமே நம்பினார். அவரது மெதுவான செயல்பாட்டில் களைத்துப் போன அறிகுறிகள் இருந்தன.

## மாநில சட்டசபைகள் கலைப்பு

இந்திரா பிரதமராகப் பதவி ஏற்ற போது அஸ்ஸாம் உட்பட பல மாநிலங் களில் பிரச்சனைகள் தலை தூக்கின. இந்தப் பிரச்சனைகளையெல்லாம் தீர்க்க வேண்டுமானால் மத்தியிலும் மாநிலங்களிலும் நிர்வாகம் காங்கிரசின் கட்டுப் பாட்டிற்குள் இருக்கவேண்டும் என்று நினைத்தார் இந்திரா. எனவே பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த காங்கிரஸ் அல்லாத 8 மாநில அரசுகளை கலைத்து விட்டு குடியரசுத்தலைவர் ஆட்சியை கொண்டு வந்தார்.

மறுபடியும் ஜனதா அரசு சென்ற பாதையிலேயே இந்திராவும் சென்றார். அரசியலமைப்பின் 356-வது ஷரத்தின்படி இந்த மாநில அரசுகள் கலைக்கப் பட்டன. இதனால் மத்திய - மாநில உறவுகள் சீர்கெட ஆரம்பித்தன. மீண்டும் நடைபெற்ற தேர்தலில் கலைக்கப்பட்ட 8 மாநிலங்களில் தமிழ்நாடு தவிர உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், மகராஷ்டிரா, ஒரிசா ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் வெற்றியடைந்தது. தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர் தலைமையிலான அதிமுக மீண்டும் வெற்றி பெற்றது.

## விமான விபத்தில் சஞ்சய் காந்தி மரணம் : 1980 ஜூன் 29

அரசியலில் இந்திரா காந்திக்குத் துணையாக இருந்தவர் அவரது இளைய மகன் சஞ்சய் காந்தி. இந்திரா காந்தியின் அரசியல் வாரிசு என்று கருதப் பட்டவர். துணிச்சல் மிக்கவர். அரசியல் வியூகங்களை வகுப்பதில் வல்லவர். பாராளுமன்றத் தேர்தலிலும், பின்னர் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் களிலும் காங்கிரஸ் வெற்றி பெற்றதால் சஞ்சய் காந்தி தேசத்தலைவர் நிலைக்கு உயர்ந்தார். இந்திராவுக்குப் பிறகு இவரே பிரதமராவர் என்ற நிலை காணப் பட்டது.

ஆனால் இந்திரா பிரதமராகப் பதவி ஏற்ற 6 மாத காலத்திற்குள் சஞ்சய் காந்தி எதிர்பாராதவிதமாக விமான விபத்தில் தனது 33-ம் வயதில் மரணமடைந்தது நாட்டையே அதிர்ச்சியடையச் செய்தது. அரசியலில் தாயாருக்கு துணையாக இருந்து வந்து சஞ்சய் காந்தி சிறிய விமானங்களை ஓட்டுவதற்குப் பயிற்சி பெற்று வந்தார். 1980 ஜூன் 29 காலையில் ஒரு சிறிய விமானத்தில் பயிற்சிக்கு சென்ற போது விபத்து ஏற்பட்டு விமானம் நொறுங்கி விழுந்தது. அதில் பயணம் செய்த சஞ்சய் காந்தி மற்றும் பயிற்சியாளர் சாக்சனா ஆகியோர் உயிரிழந்தனர். தனது அரசியல் வாரிசாக உருவாகி வந்த சஞ்சய் காந்தி திடீரென மரணம் அடைந்தது இந்திராவுக்கு தாங்க முடியாத துயரம் அளித்த போதிலும் மனதைத் திடப்படுத்திக் கொண்டார்.

## அரசியலில் குதித்த ராஜீவ் காந்தி

சஞ்சய் இறந்த பிறகு விமானம் ஓட்டும் பைலட்டாக வேலை பார்த்து வந்த மூத்தமகன் ராஜீவ் காந்தியை ராஜினாமா செய்யச் சொன்னார் இந்திரா. அதன்படி வேலையை விட்டு விலகிய ராஜீவ் காந்தி தாயாரின் பணிகளில் அவருக்கு உதவியாக இருந்து வந்தார். இந்திரா காந்திக்கு உதவியாக இருந்து வந்த ராஜீவ் காந்தியின் வாழ்க்கையில் 1981-ல் பெரிய திருப்பம் ஏற்பட்டது.

சஞ்சய் காந்தி இறந்ததால் அமேதி தொகுதியில் 1981-ஜூன் மாதம் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதில் ராஜீவ் காந்தி போட்டியிட வேண்டும் என்று விரும்பினார் இந்திரா. ராஜீவ் காந்திக்கும், அவரது மனைவி சோனியாவுக்கும் இதில் விருப்பமில்லை. ஆனால் இந்திராவின் வேண்டு கோளை , ஏற்றுக் கொண்டு தேர்தலில் நிற்க சம்மதித்தார் ராஜீவ் காந்தி. தேர்தல் 1981, ஜூன் 15ல் நடைபெற்றது. தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட மக்கள் கட்சி வேட்பாளர் சரத்யாதவை 2 லட்சத்து 37 ஆயிரம் ஓட்டு வித்தியாசத்தில் தோற் கடித்து எம்.பி. ஆனார் ராஜீவ் காந்தி.

## அஸ்ஸாம் போரட்டம்

அஸ்ஸாமில் அந்நியர் பிரச்சனை இந்திரா காந்தியின் காலத்தில் விஸ்வரூபம் எடுத்தது. அஸ்ஸாமில் இரு வகையான அந்நியர்கள் இருந்தனர். இந்தியப் பிரிவினையின் போது கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியே வந்து

குடியேறியவர்கள். இவர்கள் இந்தியக் குடியுரிமை பெற்றார்கள். 1971-ல் பங்களா தேஷ் போரின் போது அகதிகளாக வந்த 10 லட்சம் பேரில் ஒரு லட்சம் பேர் அஸ்ஸாமில் தங்கிவிட்டார்கள். இவர்கள் பெரும்பாலோர் முஸ்லீம்கள். 1971-க்குப் பிறகும் பங்களாதேஷிலிருந்து விவசாயிகள் அஸ்ஸாமில் குடியேறினார்கள். இப்படி சட்டவிரோதமாக வந்தவர்கள் அஸ்ஸாமில் தங்களை வாக்காளர்களாகவும் பதிவு செய்து கொண்டார்கள். அதாவது அஸ்ஸாம் மக்கள் தொகையில் 31 சதவீதம் பேர் சட்ட விரோதமாகக் குடியேறியவர்களாக இருந்தார்கள்.

இப்படி சட்ட விரோதமாகக் குடியேறியவர்களை எதிர்த்து அனைத்து அஸ்ஸாம் மாணவர் சங்கமும் (AASU) அஸ்ஸாம்கண சங்ரம் பரிஷத்தும் இணைந்து மாபெரும் கிளர்ச்சியை நடத்தின. 1982-ல் அஸ்ஸாம் போரட்டக் களமானது. அஸ்ஸாம் கலவரப் பகுதி என்று அறிவிக்கப்பட்டது. 1982 மார்ச்சில் அஸ்ஸாம் குடியரசுத்தலைவர் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.

1983-ல் பிப்ரவரியில் தேர்தல் நடத்த மத்திய அரசு முடிவு செய்தது. அப்போது எல்லா எதிர்க்கட்சிகளும் தேர்தலைப் புறக்கணித்தன. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது. வன்முறைச் சம்பவங்களில் 300 பேர் உயிரிழந்தனர். அஸ்ஸாமியர், பெரும்பான்மையாக உள்ள தொகுதிகளில் 2 சதவீதத்திற்கும் குறைவானவர்களே வாக்களித்தனர். காங்கிரஸ் வெற்றி பெற்றது. ஆனால் அந்நியர் பிரச்சனையைத் தீர்ப்பதில் இந்திரா அரசு வெற்றி பெறவில்லை.

## பஞ்சாப் நெருக்கடி

பஞ்சாபில் வளர்ந்து வந்த அகாலிதளம் கட்சியின் செல்வாக்கை ஒழிப்பதற்கு காங்கிரசால் ஆதரிக்கப்பட்ட பிந்தரன்வாலே என்பவர் பின்னர் பயங்கரவாதியானார். தனிநாடு கேட்டு பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டார். நிரங்கரி சிக்கியர்கள், பத்திரிக்கையாளர்கள், இந்துக்கள், காங்கிரஸ்காரர்கள், போலீஸ் அதிகாரிகள், பொது மக்கள் என்று பலர் கொல்லப்பட்டார்கள்.

1982 ஜூலையில் பிந்தரன்வாலே தனது பயங்கரவாத பாதுகாப்புப் படையினருடன் சீக்கியர்களின் புனித ஸ்தலமான அமிர்தசரஸ் பொற் கோவிலில் தங்கினார். தனிநாடு கேட்டு இந்திய அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்த மக்களிடம் அறை கூவல் விடுத்தார் பிந்தரன் வாலே.

ஆனால் 1981-1984ம் ஆண்டுகளில் பயங்கரவாதத்தை எதிர்த்து உறுதியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை. 1984 ஜூன் மாதத்தில் பஞ்சாப் பிரச்சனை மூலம் இந்தியாவின் ஒற்றுமைக்கு ஆபத்து என்ற கவலை ஏற்பட்ட போது தான் இந்திய அரசு 'ஆபரேசன் புளூஸ்டார்' என்ற ராணுவ நடவடிக்கை யைத் தயாரித்தது.

அந்த திட்டப்படி 1984 ஜூன் 3-ல் இந்திய ராணுவம் பொற்கோவிலைச் சூழ்ந்து கொண்டு பயங்கரவாதிகளுக்கெதிரான நடவடிக்கைகளை ஆரம்பித்தது. பொற்கோவிலுக்குள் புகுந்து பிந்தரன்வாலே மற்றும் அவருடன் இருந்த பயங்கரவாதிகளைச் சுட்டுக் கொன்றது. பொற்கோவிலில் புனிதமாக கருதப்படக்கூடிய ஹர்மந்திர்ஷாகிப், அகால்தத் ஆகிய பகுதிகள் சேதமடைந்தது. சீக்கியர்கள் அதிர்ச்சியடைந்தனர். பஞ்சாபில் பயங்கரவாதம் நசுக்கப்பட்டது. ஆனால் அதற்கு இந்திரா காந்தி தனது உயிரையே விலையாகக் கொடுக்க வேண்டியதிருந்தது.

## இந்திரா காந்தி சுட்டுக் கொலை 1984, அக். 31

மகாத்மா காந்தி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பிறகு இந்தியாவில் நடைபெற்ற மிகக் கொடூரமான நிகழ்ச்சி பிரதமர் இந்திரா காந்தி கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியாகும். 16 ஆண்டுகாலம் பிரதமராகப் பதவி வகித்த இந்திரா காந்தி அவரது வீட்டில் அவரது சீக்கிய பாதுகாவலர் களாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

சீக்கியர் பொற்கோவிலில் தீவிரவாதிகளுக்கும் ராணுவத்திற்கும் இடையே நடந்த போருக்குப் பிறகு இந்திரா மீது சீக்கியர்கள் பலர் ஆத்திரம் கொண்டிருந்தனர். அதன் காரணமாக இந்திராகாந்தியின் வீட்டில் காவல் பணியில் சீக்கியரை அமர்த்தக்கூடாது என்று ரகசியத்துறை டைரக்டர் கூறிய யோசனையை இந்திரா ஏற்றுக் கொள்ளவில்லை. ஆம். விதி விளையாடியது!

1984, அக்டோபர் 31- காலை 8 மணிக்கு இந்திரா காந்தி பற்றி டெலிவிஷன் படம் ஒன்றை எடுப்பதற்காக வெளிநாட்டுப் படப்பிடிப்பாளர் ஒருவர் வந்து பிரதமரின் அலுவலகத்தில் காத்திருந்தார். அவருக்குப் பேட்டியளிக்க இந்திரா தனது வீட்டிலிருந்து பக்கத்தில் உள்ள அலுவலகத்திற்கு நடந்து சென்றார். அப்போது அவர் வீட்டுப் பாதுகாவலர்களான பியாந்த்சிங், சத்வந்தசிங் ஆகிய இருவரும் இயந்திரத் துப்பாக்கியால் இந்திராவை நோக்கி சரமாரியாகச் சுட்டார்கள். இந்திரா ரத்தவெள்ளத்தில் கீழே சாய்ந்தார். உயிர் பிரிந்தது.

கமாண்டோ படைகள் சுட்டதில் பியாந்த்சிங் மரணமடைந்தான். சத்வந்த்சிங் படுகாயம் அடைந்தான்.

## ராஜீவ்காந்தி பிரதமராகப் பதவி ஏற்பு : 1980 அக். 21

இந்திரா காந்தி கொல்லப்பட்ட அன்று குடியரசுத்தலைவர் ஜெயில்சிங் வெளிநாட்டில் இருந்தார். ராஜீவ்காந்தி தேர்தல் பிரச்சாரத்திற்காக மேற்கு வங்காளம் சென்றிருந்தார். ஜெயில்சிங்கும், ராஜீவ் காந்தியும் உடனடியாக விமானம் மூலம் டெல்லி திரும்பினார்கள்.

இதற்கிடையில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி மன்றக்குழு உடனே கூடி புதிய பிரதமராக ராஜீவ்காந்தியைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தது. அன்று

மாலை 6.30 மணிக்கு குடியரசுத்தலைவர் மாளிகையில் இந்தியாவின் புதிய பிரதமராக ராஜீவ் காந்தி பதவியேற்றார். அவருக்கு குடியரசுத்தலைவர் ஜெயில்சிங் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பின்னர் ராஜீவ் தலைமையில் மந்திரி சபைக் கூட்டம் நடந்தது. இந்திரா காந்தியின் இறுதி ஊர்வலம் பற்றி ஆலோசனை நடத்தப்பட்டது.

## வன்முறை, கலவரம்

இதற்கிடையே இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டதற்கு பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று ஆத்திரம் அடைந்தவர்கள் சீக்கியர்களின் கடைகளையும் வீடுகளையும் தாக்கினார்கள். ஏராளமான சீக்கியர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

பயந்து போன சீக்கியர்கள் வீடு வாசலை விட்டு விட்டு பஞ்சாப் மாநிலத்திற்குத் தப்பி ஓடினர். இந்தக் கலவரங்களில் இறந்த சீக்கியர்களின் எண்ணிக்கை 3 ஆயிரம் இருக்கும் என்றும், டெல்லியில் மட்டும் 2 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. சுமார் 50 ஆயிரம் பேர் வீடு வாசல்களை இழந்து அகதிகளாயினர். வன்முறைக் கும்பலில் சமூக விரோதிகளும் ஊடுறுவியிருந்ததால் கலவரம் நீடித்தது. வன்முறையை ஒடுக்குமாறு ராணுவத்திற்கு உத்தரவிட்டார் ராஜீவ்காந்தி. அதன்படி டெல்லியிலும் பிறபகுதியிலும் ராணுவத்தினர் கலவரத்தை அடக்கினர்.

## இந்திராவின் இறுதி ஊர்வலம்

இந்திராவின் உடல் நேரு வசித்த தீன் மூர்த்தி இல்லத்தில் 2 நாட்கள் பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. 1980 நவம்பர் 3-ம் தேதி காலை இந்திரா காந்தியின் இறுதி ஊர்வலம் நடந்தது. அவர் உடல் பீரங்கி வண்டியில் வைக்கப்பட்டு ராணுவத்தினர் அணிவகுத்துச் செல்ல ஊர்வலம் புறப்பட்டது. யமுனை நதிக்கரையில் நேரு, காந்தி ஆகியோரின் சமாதிகள் உள்ள இடத்திற்கு அருகே சாந்திவனம் என்ற இடத்தில் இந்திராவின் உடல் தகனம் செய்யப்பட்டது. சிதைக்கு ராஜீவ் காந்தி தீ மூட்டினார். மறுநாள் இந்திராவின் அஸ்தியின் ஒரு பகுதி திரிவேணி சங்கமத்தில் கரைக்கப்பட்டது. தாயாரின் அஸ்தியின் ஒரு பகுதியை அவரது விருப்பப்படி இந்திய விமானப்படை விமானத்தில் ராஜீவ் எடுத்துச் சென்று இமயமலைச் சாரலில் தூவினார்.

## இந்திரா கொலைவழக்கு

இந்திரா காந்தி கொலை வழக்கில் 2 பேர் தூக்கில் போடப்பட்டனர். 1984 அக். 31-ம் தேதி இந்திரா காந்தி அவரது இல்லத்தில் வீட்டுப் பாதுகாவலர் களான பியாந்த் சிங், சத்வந்த்சிங் ஆகியோரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அப்போது கமாண்டோ படைகளால் சுடப்பட்ட பியாந்த் சிங் அந்த இடத்திலேயே குண்டு பாய்ந்து இறந்தான். காயமடைந்த சத்வந்த்சிங்

கமாண்டோ படைகளால் பிடிக்கப்பட்டான். பின்னர் நடந்த விசாரணையில் பல்பீர்சிங், கேகர்சிங் ஆகிய 2 பேரும் இந்தக் கொலைக்கு சதி செய்ததாக கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். இதில் பல்பீர்சிங் அரசு எழுத்தர் வேலை பார்த்தவன். கேகர்சிங் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர். இந்த 3 பேர் மீதும் டெல்லி செசன்ஸ் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

8 மாதமாக நடந்த இந்த வழக்கில் 1986, ஜன 23-ல் மூன்று பேருக்கும் தூக்குத் தண்டனை விதித்து நீதிபதி மகேஷ் சந்திரா தீர்ப்பு கூறினார். தூக்குத் தண்டனையை எதிர்த்து 3 பேரும் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். இதில் பல்பீர்சிங் தூக்குத் தண்டனை ரத்து செய்யப்பட்டது. சத்வந்த் சிங், கேகர்சிங் ஆகிய 2 பேருக்கும் தூக்குத்தண்டனை உறுதி செய்யப்பட்டது. கேகர்சிங் அனுப்பிய கருணை மனு குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப் பட்டது. சத்வந்த் சிங் கருணை மனு அனுப்ப மறுத்துவிட்டான். 1989 ஜனவரி 6ல் இருவரும் டில்லி திகார் சிறையில் தூக்கில் போடப்பட்டனர். அவர்கள் உடல்கள் சீக்கிய சம்பிரதாயப்படி சிறைக்குள்ளேயே தகனம் செய்யப்பட்டது.

## இந்திரா காந்தியைப் பற்றிய மதிப்பீடு

இந்திரா காந்தி சுமார் 16 ஆண்டுகள் பிரதமராக இருந்தார். அவர் சிக்கலான ஆளுமையைக் கொண்டவர் என்பதால் அவருடைய ஆட்சி முறைக்கு ஆதரவும் தீவிரமான எதிர்ப்பும் இருந்தன. அவர் அரசியலில் வளர்ச்சியடைந்த பொழுது இயல்பாகவே அவரிமிருந்த அரசியல் திறமை அதிகரித்தது. அவர் தன்னைச் சுற்றியிருப்பவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டாலும், அவரே முடிவுகளைச் செய்தார். அவர் மனவுறுதி உள்ளவர். உக்கிரமான போராளி. சண்டையென்று வந்துவிட்டால் இரக்கமில்லாதவர். அவர் துணிச்சலாக முடிவுகளைச் செய்தார். சரியான நேரத்தைத் தேர்ந்தெடுத்து எதிரியைத் தாக்குவார்: (1969-ல் காங்கிரசைப் பிளந்ததும், 1971இல் கிழக்கு பாகிஸ்தானுக்குள் இந்திய ராணுவத்தை அனுப்பியதும் உதாரணங்கள்) அமெரிக்காவின் ஏழாவது கப்பற்படை வங்காள விரிகுடாவுக்குள் நுழைந்த பொழுது அவர் அஞ்சவில்லை. 1975ல் துணிச்சலாக அவசர நிலையைப் பிரகடனம் செய்தார். 1977ல் ஜனதா அரசாங்கம் சர்க்காரியா கமிஷனை அமைத்து அவரைத் துன்புறுத்தியது எனினும் இந்திரா காந்தி மனம் தளரவில்லை.

அவர் இந்திய மக்களை நேசித்தார். இந்தியாவைப் பற்றி பெருமைப் பட்டார். அதன் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையுடன் இருந்தார். உலக நாடுகளுக்கு மத்தியில் இந்தியா சிறந்து விளங்க வேண்டும் என்று விரும்பினார். இந்தியா பொருளாதாரத்திலும் அறிவியல் நுட்பத்திலும் வளர்ச்சியுற வேண்டுமென்று விரும்பினார். இந்தியாவில் வேளாண்மைத் துறையில் பசுமைப்புரட்சியைக் கொண்டு வந்தார். இந்தியாவின் உணவுத் தேவைகளுக்கு அந்நிய நாடுகளை நம்பியிருந்த நிலை மறைந்தது.

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் அந்நிய நாடுகள் தலையிடாத படி பார்த்துக் கொண்டார். இந்திய விஞ்ஞானிகள் அணுசக்தி ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கு உதவி செய்தார். அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் (NNPT) இந்தியா கையெழுத்திட வேண்டும் என்று அமெரிக்காவும் சோவியத் யூனியனும் கேட்டுக் கொண்டன. ஆனால் இந்திரா காந்தி மறுத்தார். இந்தியா அணுசக்தியை சமாதானத்துக்குப் பயன்படுத்தும் என்று கூறினார். நேரு உருவாக்கிய வெளிநாட்டுக் கொள்கையை அவர் வலுப்படுத்தினார்.

இந்திரா காந்தியிடம் நேருவின் சித்தாந்தப் பிடிப்பு இல்லை. அவர் மத்திய நிலை - இடதுசாரிச் சாய்வு உள்ளவர். இந்தியா வேகமான பொருளாதார வளர்ச்சி அடையவேண்டும் என்று விரும்பினார்.

அவர் மதச் சார்பின்மையை ஆதரித்தார். டாக்டர் ஜாகிர் ஹூசேனை இந்தியாவின் ஜனாதிபதி ஆக்கினார். அவருடைய பாதுகாப்புப் படையில் சீக்கிய வீரர்கள் இருந்தார்கள். உயர் அதிகாரிகள் அவர்களை மாற்ற விரும்பிய பொழுது இந்திராகாந்தி அவர்களைத் தடுத்தார். அந்தக் காவலர்கள் அவரை சுட்டுக் கொன்றார்கள்.

அவர் ஏழைகளுடைய நலனில் அக்கறை கொண்டிருந்தார். ஏழைகள் ஹரிஜனங்கள், ஆதிவாசிகள், பெண்கள் ஆகியோரை அரசியல்படுத்தினார்.

சுமார் பதினாறு ஆண்டுகள் ஆட்சி செய்த இந்திரா காந்தியிடம் தொலை நோக்கு இல்லை. அவர் நாட்டுக்குப் பயன்படக்கூடிய நிரந்தர அமைப்புகளை உருவாக்கவில்லை. அவர் பிரதம மந்திரியின் செயலகம் (PMO) என்ற அமைப்பை மட்டுமே உருவாக்கினார். அது இந்திய அரசாங்கத்தின் முக்கியமான உறுப்பாக மாறியது. மத்திய கேபினெட் அமைச்சர்களுடைய அதிகாரத்தைக் குறைத்தது. முதலமைச்சர்களை மிரட்டியது.

வெளிஉறவுத்துறை மற்றும் பொருளாதாரத்தில் நேருவின் கொள்கை அவருக்கு வழிகாட்டியது. ஆனால் இந்திரா அவற்றை வளர்க்கவில்லை. புதிய சூழ்நிலைக்குத் தக்கபடி அவற்றைத் தகவமைக்கவில்லை. நாட்டில் பிரிவினை வாதம், வகுப்புவாதம் ஆகியவை தலைதூக்கியபொழுது அவற்றை ஒழிப்பதற்கு அவரிடம் திட்டம் இல்லை. அவரால் பஞ்சாப், அஸ்ஸாம், காஷ்மீர் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியவில்லை.

அவர் காலத்துக்கேற்ற புதிய அமைப்புகளை உருவாக்கவில்லை என்று குறிப்பிட்டோம். ஏற்கெனவே உருவாக்கப்பட்டிருந்த அமைப்புகள் அவர் காலத்தில் படிப்படியாக முக்கியத்துவத்தை இழந்து உருக்குலைந்தன. ஆகவே அவர் எல்லா அதிகாரத்தையும் தன்னிடம் வைத்துக் கொண்டு செயல் பட்டார். அரசாங்கம் மற்றும் கட்சி சம்பந்தப்பட்ட எல்லா பிரச்சினைகளையும் அவர்தான் முடிவு செய்யவேண்டும். சொந்த செல்வாக்குள்ள முதலமைச்சர் களைப் பதவியிலிருந்து நீக்கினார். அவர் நியமித்த புதிய முதலமைச்சர்கள் பிரதமருடைய ஆதரவு இல்லாமல் குறைந்த காலம் கூட நீடிக்க முடியாதவர்கள். இந்திராகாந்தி காலத்தில் முதலமைச்சர்களின் அரசியல்

அந்தஸ்து மிகவும் குறைந்துவிட்டது. மாகாண காங்கிரஸ் அமைப்புகளில் கோஷ்டிச் சண்டைகள் ஏற்பட்ட பொழுது அவர் நெருப்பை அணைக்கின்ற வேலையைச் செய்தார். நாட்டின் முக்கியமான பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய பிரதமர் கட்சியின் அற்பமான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அதிக நேரத்தைச் செலவிட்டார்.

இந்திரா காந்தி எல்லா அதிகாரத்தையும் தன்னிடம் குவித்துக் கொண்டாலும் பார்லிமென்டரி அரசியலின் வரையறைகளுக்கு உள்ளாகவே இயங்கினார். பத்திரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. கல்வியாளர்கள் மற்றும் அறிவு ஜீவிகள் அவரை சர்வாதிகாரி என்று கண்டனம் செய்தார்கள். இந்திரா காந்தி அவர்களைக் கைது செய்யவில்லை. அவசர நிலைப் பிரகடனம் கூட அரசியலமைப்புச் சட்டத்தின்படி கொண்டு வரப்பட்டது. தேர்தலை அறிவித்து அவசர நிலையை அகற்றியதும் அவர் தான். மக்கள் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு கண்ணியமாகப் பதவி விலகினார். இது ஒரு சர்வாதிகாரியின் செயல் அல்ல.

அவர் 1969ல் காங்கிரஸ் கட்சியில் பிளவை ஏற்படுத்தினார். காங்கிரஸ் கட்சியிலிருந்த குறைகளை அகற்றி அதற்குப் புதிய உத்வேகத்தைக் கொடுத்தாரா? மக்களிடம் செல்லும்படி காங்கிரஸ்காரர்களைத் தூண்டினாரா? இல்லை. மாகாண காங்கிரஸ் கமிட்டிகளை, நிர்வாகிகளை அவரே நியமித்தார். அரசாங்கக் கொள்கைகளைப் பற்றி கட்சியில் விவாதங்கள் நடைபெறவில்லை.

அரசியல் நுட்பம், அரசியல் மேதாவிலாசம் என்று இரண்டு பண்புகள் உள்ளன. இந்திராகாந்தியிடம் அரசியல் நுட்பத்திறமை இருந்தது. ஆனால் மேதாவிலாசம் இல்லை. இந்திரா காங்கிரஸ் மாகாணங்களிலும் மத்தியிலும் சட்ட சபைகளில் பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருந்தது. சட்டசபை அரசியலில் திறமை இருந்தால் போதாது. மக்களுடைய உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டு தொலைநோக்குடன் அவர்களை வழிநடத்த வேண்டும். இந்திரா காந்தியிடம் அரசியல் மேதைமை இல்லாததால் அவர் கிளர்ச்சிகளையும் பிரச்சினைகளையும் தொடர்ச்சியாக சந்தித்தார். ஏழைகளும் ஒடுக்கப்பட்டவர்களும் 1971-1972 மற்றும் 1980 தேர்தல்களில் அவரை ஆதரித்தார்கள். ஆனால் இந்திரா காங்கிரசில் உயிர்த்துடிப்பு இல்லை. சுயநலக்காரர்களும் பதவி வேட்டைக்காரர்களும் அதில் அடைக்கலம் தேடினார்கள்.

இந்திரா காந்தி மரணமடைவதற்குச் சில நாட்களுக்கு முன்பு ஒரு நண்பரிடம் கூறினார். ''என்னை ஒழிப்பதற்கு விரும்புகின்றார்கள். அப்படியே நடக்கட்டும். எல்லாக் கடன்களையும் நான் தீர்த்துவிட்டேன்''. இந்தியர்கள் அதை மறுக்கமுடியாது. அவர் 1966ல் பதவியேற்ற பொழுது இருந்ததைக் காட்டிலும் 1984இல் மரணமடைந்த பொழுது அதிகமான வலிமை, சுயநம்பிக்கையுள்ள நாடாக இந்தியா இருந்தது.